துரைத்தனத்தாரும் அங்கீகரித்தது

# தசகுமார சரித்திரம்

RECEIVED

இது

பிரஸிடென்ஸி காலேஜ்
சம்ஸ்கிருத் பண்டிதராயிருந்த
ஸ்ரீநிவாஸராகவாசாரியார்
மொழிபெயர்த்தது.

அல்லயன்ஸ் கம்பெனி,
"ஷண்முக விலாசம்"
மயிலாப்பூர்,
சென்னை

[விலை அணா 6

சிறுவர்க்கான

பஞ்ச ரத்தினங்கள்

| | | |
|---|---|---|
| பால ஷண்முக விஜயம் | ... | 0—8—0 |
| பால ராமாயணம் | ... | 0—8—0 |
| பால பாரதம் | ... ... | 0—8—0 |
| பால பாகவதம் | ... | 0—8—0 |
| நால்வர் சரித்திரம் | ... ... | 0—8—0 |

# தசகுமார சரித்திரம்

## முதலாவது:
## குமாரர்கள் உற்பவித்தல்

மகததேசத்தில் புஷ்பபுரி யென்றும் பாடலிபுர மென்றும் பேர்பெற்ற நகரம் ஒன்றுண்டு. அது எங்கும் கல்வியிற் றேர்ந்த வித்துவான்கள் கூட்டங்கூடி கதாப்பிரசங்கஞ் செய்யப்பெற்றும், கண்ணாடிபோல் பிரகாசிக்கின்ற மாடமாளிகை கூட கோபுரங்கள் நிரம்பி, காண்போர்கள் பிம்பமென்றும் பிரதிபிம்பமென்றும் தெரியாமல் தடுமாறப் பெற்றும், கடலில் இவ்வளவு இரத்தினங்கள் இருந்தனவோ என்று கண்டோர் வியக்கும்படி கடைகளில் பல ரத்தினங்கள் பரப்பப்பெற்றும், சகல சாம்பிராஜ்யமும் நிறைந்து பூமிக்கு ஒரு அலங்கார மணிபோலிருந்தது.

அந்த ராஜ்யத்தில் ராஜஹம்ஸனென்று ஒரு ராஜா அரசாட்சி செலுத்தி வந்தான். யாவராலும் அவனுடைய பாக்கியப் பெருமை புகழத்தக்கதா

யிருந்தது. அவன் ஆளுகையில் குறைகூறின குடிகளே இல்லை, முறைய மிட்டவர்களுமில்லை. அவன் 'இளமை யிற்கல்' என்கிறபடி, சிறுவயதிலேயே சகலமான வேதங்களும், சாஸ்திரங்களும் மற்றுமுள்ள ராஜ நீதி களும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்து முக்கியமாய்த் தனுர்வித்தையில் மிக வல்லவனாகி மேன்மைபெற்றிருந் தான். இளமைப் பருவம் நீங்கி இல்லற நடத்தத்தக்க வயது வந்தபோது வசுமதியென்னும் ஒரு பெண்ணைக் கலியாணஞ் செய்துகொண்டு அம்மனையாட்டியோடு கூடி அரசர்கள் அனுஷ்டிக்க வேண்டிய தருமங்க ளெல்லாம் நீதிமுறை தவறாமல் நாள்தோறும் நடத்தி வந்தான்; அந்தப் பெண்மணியின் வடிவழகை வர்ணிக்க வல்லவர் ஒருவரும் இல்லை. சிறிது வர்ணித்துச் சொல்லுகிறேன் : முன் சிவனுடைய நெற்றிக்கண்ணால் மன்மதன் எரிக்கப் பட்டபோது அவனுடைய வில் அவளுடைய புருவமாகவும், அவன் கொடிக்குறியான மீன் அவள் நேத்திரமாகவும், அவன் சங்கு அவள் கண்டமாகவும், அவன் அம்பாகிய தாமரைப்பூ அவ ளுடைய பாதமாகவும், அவன் மித்திரனான சந்திரன் அவள் முகமாகவும் ஆய்விட்டன என்று சொல்லத் தக்க விதமாயிருந்தன.

அந்த ராஜகுமாரனுக்கு அரசாளும்படியான வயது வந்தபோது, அங்குள்ள மந்திரி முதலானவர் களும் குடிகளும் இப்படிப்பட்ட ஓரரசன் கிடைத்த ஜன்மாந்தரத்துத் தவப்பேறுதா னென்று மன மகிழ்ந்து அவனை நவரத்தின சிங்காசனத்தில் ஏற்றிப் பட்டாபிஷேகஞ் செய்து முடி சூட்டினர். அவன் தன்னை ராஜாவாக நியமித்தபின், யாவரும் கொண் டாடும்படி மேன்மையாய்ச் செங்கோல் செலுத்தி

வந்தான். அவனுடைய ராஜாங்கத்தில் தருமபாலன், பத்மோத்பவன், ஸிதவர்மா என்று, புத்தியால் தேவ குருவையும் அதிசயிக்கவல்ல மூவர் குலமந்திரிகள் ஆலோசனைச் சபையாரா யிருந்தனர். அம்மூவருள் முதல்வனுக்கு சுமந்திரன், சுமித்திரன், காமபாலன் என மூவர் குமாரரும், இரண்டாவனுக்கு ஸுசுருதன், ரத்னோத்பவன், என்று இருவரும், மூன்றுவனுக்கு சுமதி, ஸத்தியவர்மா என்று இருவரும் பிறந்தார்கள்.

அவர்களுள் ஸத்தியவர்மா தருமசிந்தை யுள்ளவனும் விரக்தனுமாகி இல்வாழ்க்கை சாரமற்றதென்று அறிந்து, தீர்த்தயாத்திரை செய்யவேண்டு மென்னும் விருப்பத்தால் நின்ற விடத்தில் நில்லாமல் தேசதேசங்களும் சுற்றத் தலைப்பட்டான். காமபாலனோ அப்படியன்றிச் சிற்றின்பத்திலே நோக்கமுள்ளவனாய்ப் பாட்டு, கூத்து முதலியவைகளில் விருப்பங்கொண்டு தாய் தந்தையர்களுக்கு அடங்காமல் தான்தோன்றியாய்த் திரிந்து கொண்டிருந்தான். ரத்னோத்பவன் இவ்விரு வழியிலும் புகாமல் பொருளாசை மேற்கொண்டு ‘ திரைகடலோடியுந் திரவியந் தேடு ’ என்கிறபடி, கப்பலேறித் தேசாந்தரம் போவதும் வருவதுமாய் வாணிபத்திலேயே கண்ணாயிருந்தான். மற்ற நால்வரும் சாதாரணமாய்ப்பட்டணத்திலேயே பெருந்தன்மை பொருந்தியிருந்தார்கள். இப்படியிருக்க, சில நாளில் தங்கள் தந்தையர்கள் பரலோகஞ் சேரத் தாங்களே அந்த ராஜஸமஸ்தானத்தில் மந்திரிகளாயிருந்தார்கள். இவ்வமைச்சர்களின் ஆலோசனையைத் துணையாகக்கொண்டு அந்த ராஜஹம்ஸ சக்கரவர்த்தி, ராஜ்யமெங்கும் செழித்துத் தழைத்தோங்கி அமைதியாய் நிற்கும்படி பரிபாலித்துவந்தான்.

அக்காலத்தில் அந்த மகாராஜன் தென்தேசமெங்கும் ஒற்றுமையாயிருப்பது கண்டு பிறதேசங்களின் மேற் படையெடுத்துப் போன விடமெல்லாம் வெற்றி வீரனென்று பேர்பெற்று வருகையில், ஒரு கால் மாளவ தேசத்தைக் கைக்கொள்ள விரும்பி அத் தேசத்தரசனான மானஸார னென்பவனை அளவற்ற சேனைகளோடு எதிர்த்துச் சென்றான். இச்செய்தி கேட்ட மாளவராஜன், வெகு நாளாய்த் தக்க இரையில்லாமல் ஆவலோடு எதிர்பார்த்திருந்த தோள் வலிக்கு இப்போதுதான் பாரணை கிடைத்ததென்று யானையைக் கண்ட சிங்கம்போலக் கொந்தளித்து எங்கே எங்கே என்று அவன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

மகததேசத்து அரசன் கடல்போல் பொங்கி வருகின்ற தன் சேனையோடு வந்து நெருங்கவே, இருதிறத்துத் தலைவர்களும் கைகலந்து சிறிதும் மனஞ்சலியாமல் நெடுநேரம் போராடினார்கள். அப்போது அந்தக் காணாக் காட்சியைக் கண்டு களிக்க வானத்தில் வந்து நிறைந்த வானவர், விஞ்சையர், வித்தியாதரர் முதலியவர்களும் இவர்களுடைய ஜயாபஜயங்களைக் கண்டு பிடிக்கமாட்டாமற் போனார்கள். கடைசியில் மாளவ ராஜனுடைய படைகளெல்லாம் முறிந்து மடிந்து போகவே, மானிகளுக்குத் தலைவனான மானஸாரனும் உயிரோடு தன் பகைவர் கையில் அகப்பட்டுக்கொண்டான். ஜயசீலனான ராஜஹம்ஸன் சத்துரு நமது கையிற் சிக்கிக்கொண்டானென்று அகங்காரப்பட்டு அவனைப் பலவாறு துன்பப்படுத்தாமல், அவன்மேற் கருணைகூர்ந்து உடனே சிறைமீட்டு முன்போலவே அவன் தேசத்துக்கு அவனை அரசனாக்கினான். அவ்

வாறே அந்தச் சக்கரவர்த்தி இன்னும் பற்பல ராஜ்யங்களையும் தனது ஆளுகைக்குள்ளாக்கி அகண்ட பூமண்டலாதிபதியாய் அரசாண்டு வந்தான். ஆகிலும் தன் வம்சத்திற்கு வித்தாய்த் தனக்கு ஒரு குழந்தை இல்லையென்னுங் குறை அவன் மனதிற் குடிகொண்டிருந்ததனால் சந்ததியின் பொருட்டு நாடோறும் கடவுளை அர்ச்சித்து வந்தான்.

ஒரு நாள் அவனுடைய பட்டத்துத் தேவியான வசுமதிதேவி விடியற்காலை வேளையில், சுவாமி எழுந்தருளி ஒரு பாரிசாதக்கனியைத் தனக்கு அனுக்கிரகஞ் செய்து கொடுத்ததாய், கனவுகண்டவளாய்ச் சில நாளில் கருவுந் தரித்தாள். அது கண்டு மகாராஜன் நாம் செய்த தவம் பலித்ததென்று மனமகிழ்ந்து அவ்வழகிக்குப் பும்ஸவன சீமந்த முகூர்த்தம் நடத்த வேண்டுவதற்காக முத்தாலும், பவழத்தாலும் பந்த லிட்டுப் பட்டணமெங்குஞ் சிங்காரித்துத் தேசதேசத்து ராஜாக்களையும் வரவழைத்து, மகா வைபவத்துடனே சீமந்த கலியாணத்தை நிறைவேற்றி, வந்தவர் யாவருக்கும் அவரவர்க்குத் தக்கபடி வெகுமானஞ் செய்து தங்கள் தங்கள் ஸ்தானத்திற்குச் செலவு கொடுத்து அனுப்பினான்.

பின்பு ஒரு நாள் அவ்வரசன் ராஜசபையில் மந்திரி முதலானவர்களோடு விநோதமா யிருக்கையில் சன்னியாசி யொருவன் வந்தான். அரசன் அவனைக் கண்டபோது, பிறநாட்டுச் செய்தியைத் தெரிந்துகொண்டு வரும்படி மாறுவேடம் பூண்டு போயிருந்த சாரனென்று தெரிந்து உடனே அங்கிருந்த மந்திரிமார்கள் தவிர மற்றவர்களை விடை கொடுத்தனுப்பிப் புன்னகை

யோடு, "ஓ தவசியே! நீ கபட வடிவத்தோடு சீமை யெங்கும் சுற்றினையே, எங்கெங்கே என்னென்ன விசேஷங்கள்" என்று கேட்க, அவன் இருகையும் கூப்பிக்கொண்டு விண்ணப்பஞ் செய்யத் தொடங்கினான்: "ஓ மகாப்பிரபுவே! நான் தாங்கள் கட்டளையிட்டபடி சத்துருராஜாக்களின் சமாசாரத்தை அறிந்துகொண்டு வரும்படி புறப்பட்டேனே; அதற்கு உண்மையான உருவத்தோடு போனால் உபயோகமில்லை யென்று யோசித்துச் சன்னியாசி வேடங்கொண்டு எங்கும் திரிந்துபார்த்துக் கடைசியில் மாளவ தேசம் வந்து, அத்தேசத்தரசனுடைய காரியத்தை விசாரித்தேன். மிகவும் அகங்காரியான மானஸாரன். முன் நமக்கும் அவனுக்கும் நேர்ந்த யுத்தத்தில் தன்னுடைய அளவற்ற சேனை அழிந்ததையும், தான் மானபங்கப்பட்டதையும் நினைத்து நினைத்து மனமுருகி, எவ்விதத்திலாவது உங்களை வெல்லவேண்டுமென்று ஆக்கிரகங்கொண்டு, மகாகாள மென்கிற க்ஷேத்திரத்தில் இராநின்ற பரமேசுவரரைக் குறித்துத் தவஞ்செய்தான். அவனுடைய பூஜையால் அவர் சந்துஷ்டராகிப் பூமி எங்கும் அழிக்கும்படியானதொரு கதாயுதத்தைத் தந்தருளினர். அவன் அதைப் பெற்றுக்கொண்டு தனக்கு எவ்விடத்திலும் எதிரியே இல்லை யென்று கர்வமடைந்து தங்கள்மேல் படையெடுத்திருக்கிறான். மேல்நடக்க வேண்டுவதெல்லாம் பிரபுக்களே தெரிந்துகொள்ளலாம்" என்றான்.

மந்திரிமார்கள் அதைக்கேட்டு ராஜஸமுகத்தில் ஓரறிக்கை செய்தனர். "ராஜாதிராஜனே மானஸாரன் தான் துர்ப்பலனா யிருந்தபோதிலும் முக்கியமாய்த் தெய்வசகாயத்தைக் கொண்டே இப்போது யுத்த

சன்னத்தனு யிருக்கின்றான்; அவனை எதிர்க்க நமக்கு இது தருணமன்று.

‘வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல்’

என்னும் பெரியோர் சொல்லைக் கேட்டதில்லையா? ஆதலால் எங்கேயாவது போய் ஒளித்துக்கொள்வதே நலம்—" என்று பலவாறு நீதி கூறினர். அவையெல்லாம் செவிடன் காதிற் சங்கூதினது போலாயின. ராஜஹம்ஸன், ஜயித்தால் ராஜ்யம்; மரித்தால் சொர்க்கம்; ஆதலால் பகைவர்க்குப் பின்வாங்குகிறதாவென்று ஒரே பிடிவாதமா யிருந்தான்.

மாளவராஜன், நமக்கு பரமேசுவரருடைய வரப்பிரஸாதத்தால் கிடைத்த கதாயுதமொன்றுமே விரோதிகளை வெல்லப் போதுமென்று தைரியத்துடன் சண்டைக்குக் கொடி தூக்கினான். அச்செய்திகேட்டு மகதராஜன் மந்திரிகள், அரசன் பிடித்தபிடியை விடுகிறதில்லை. நாம் சொல்வதில் பயனில்லை. தேவிமார்களையாவது வேறிடத்திற் கொண்டுவிட்டு வைப்போமென்று ஆலோசித்து அரசனை அனுமதி கேட்டனர். அதற்கு மாத்திரம் அவன் இசைந்ததனால் மூலபலத்தைத் தேவிமார்க்குக் காவலாக்கி, அவர்களைப் பகைவர்கள் அறியாதபடி விந்திய மலைச்சாரலில் கொண்டு சேர்த்தார்கள். மகததேசாதிபதி யானவன், மாளவராஜன் மட்டுமிதமில்லாத சேனையோடு தன் னாட்டெல்லையைக் கடந்துவந்தானென்றது கேட்டு, உடனே தானும் அளவற்ற சேனைகளோடு அப்பகைவனைத் தகைந்தான். தகையவே, பெரும் போருண்டாகி அம்மன்னவ ரிருவரும் நெடுநேரம் வெற்றி தோல்விகள் தோன்றாமல் சமபலமாய்ப் பற்பல

ஆயுதங்களைப் பிரயோகித்துப், பார்ப்பவரெல்லாம் அதிசயப் படும்படி போர் புரிந்தனர். அப்போது மானஸாரன், இவன் எந்நேரமானாலும் நமக்குச் சலிக்கிறவனன்று; இவ்விதமாயிருந்தால் நாம் ஒருபோதும் ஜயம்பெற மாட்டோமென்று மஹேசுவரர் கொடுத்த கதாயுதத்தை அவன் மேல் எறிந்தான்; ராஜஹம்ஸன் அது தன்மேல் விழவொட்டாமல் சரமாரி பொழிந்து அதைத் தடுக்க முயன்றும், தெய்வ சங்கல்பம் வீண் போகாதாகையால் அந்த கதை அவையெல்லாவற்றையுங் கடந்து ஓடிவந்து சாரதியைச் சங்கரித்து அரசனையும் மூர்ச்சைபோகச் செய்தது. அப்போது அந்தத் தேர்க்குதிரைகள் செலுத்துவோனில்லாமையால் தமக்குத் தோன்றியபடி எங்கேயோ ஓடிப்போய் அவனுடைய பாக்கிய விசேஷத்தால் அந்தப்புரத்துத் தேவிமார் இறங்கியிருந்த விந்தியமலை தாழ்வரையிற் போய்ச்சேர்ந்தன. உடனே மாளவராஜன் ஜயபேரியடித்துச் சங்கம்பூரித்து மகததேசத்தைக் கைக்கொண்டு, புஷ்ப புரத்திலேயே தான் அரசு செலுத்திக்கொண்டிருந்தான். ரணகளத்தில் வீழ்ந்து மூர்ச்சித்துப்போன மந்திரிமார்கள் சிறிதுநேரங்கழித்து இளங்காற்று முதலியவைகளால் களைதெளிந்து முழுதுந் தேடியும் அங்கெங்கும் அரசனைக் காணாமல் விசனமுற்று மனங்கலங்கி தேவிகளிடம் வந்துசேர்ந்தார்கள்.

ராஜமஹிஷி அளவற்ற சேனை யழிந்ததும், கடைசியில் தன் புருஷன் போனவிடம் தெரியாமற் போய்விட்டதும் கேள்விப்பட்டு, நாம் பிறந்ததென்ன வளர்ந்ததென்ன! நமக்கு இக்கதியா நேர்ந்ததென்று துக்கக் கடலிலாழ்ந்து தன் புருஷன் போனவழி தானும் போம்படித் தீர்மானித்தாள். அது தெரிந்து

மந்திரிமார்கள்: "அம்மா! நம்மரசர் எங்கேயோ ஜீவனோடுதான் இருக்கிறார். சிலதினத்தில் வந்து சேருவார். மேலும் உம்முடைய கர்ப்பத்தில் மிக்க சூரத்தனமுள்ள ஒரு சிறுவன் பிறக்கப்போகிறான் என்று ஜோதிஷ சாஸ்திரி ஒருவர் சொல்லியிருக்கிறார்; ஆகையால் இப்போது நீர் துணிந்தது சரியல்ல" என்று இன்பமாய்ப் பேசிச் சமாதானப் படுத்தினார்கள். அத்தேவியாரோ ஒன்றையும் கேளாமல் நம் பிராணநாதன் போன பின்பு நாம் இப்பூமியில் நாடுகிறதாவென்று கருத்துக் கொண்டு அவர்களுக்கு உத்தரமொன்றும் சொல்லாமல் சும்மாவிருந்து நல்ல நிசி வேளையில் அங்கிருந்த காவலாளர் முதலிய யாவரும் உடம்பு தெரியாமல் உறங்கிப் போகக் கண்டு, இதுதான் நல்ல தருணமென்று எழுந்திருந்து கொஞ்ச தூரம்போய் அங்கிருந்த ஓர் ஆலமரத்தின் கீழ் அம் மரக்கிளையில் வஸ்திரத்தை மாட்டி தன் கழுத்தில் சுருக்கிட்டுத் துர்மரணமாய் பிராணனைவிடத் தீர்மானித்துத் தன்னுடைய திங்குரலால் கூவிப் புலம்பத் தலைப்பட்டாள். முன் யுத்த பூமியினின்றும் ஓடிவந்த ராஜஹம்ஸனுடைய தேர்க் குதிரைகளும் அம்மரத்தினருகே வந்து நின்றன வாதலால், அத் தேரின்மேல் களைத்து விழுந்துகிடந்த அரசனுக்கு வரவர களைநீங்கிக் கொஞ்சம் பிரஞ்ஞை வந்தது. வரவே அவன் இந்த அழுகைக் குரலைக் கேட்டுத் தன் மனையாட்டிதானென்று நிதானித்து மெல்ல மெல்ல இனிய வார்த்தைகள் சொல்லி அவளைக் கிட்டவர வேண்டினான். அதைச் கேட்ட ராணியானவள் இவன் நம் நாயகன் தான் என்று ஆனந்தமடைந்து, உடம்பு தெரியாமலோடிவந்து அவனைக் கண்டு, மேகத்தைக் கண்ட

மயில்போலக் களித்து, மலர்ந்தகண் மூடாமலே அவ னைத் தழுவி முத்தமிட்டு, பக்கத்தில் நித்திரை செய்து கொண்டிருந்த சேனாதிபதிகளைச் சீக்கிரமாய் ஓடி வரும்படிக் கூவி யழைத்தாள். அவர்கள் அந்தக் கூச்சலைக் கேட்டு இதென்னவோ விசேஷமென் றோடி வந்து பார்க்கையில், தேரின்மேல் மூர்ச்சை தெளிந்து பிரஞ்ஞை வந்து படுத்திருந்த அரசனையும் அவன்மேல் ஊசிநாட்ட இடமில்லாமல் பாணம் பொத்துக் கிடப்ப தையும் கண்டு அம்மந்திரிகள்: "மகாப் பிரபுவே! அந்த மகா பாதகனால் சாரதி கொலையுண்டு போகவே தேர்க்குதிரைகள் நடத்துவானின்றி நமது நற்றவத் தால் வேறெங்கும் போகாமல் இவ்விடம் வந்து சேர்ந் தன" என்று உபசாரஞ் சொல்லித் தேற்றினார்கள். அதற்கு ராஜா "ஆமாம், தேரோட்டியை மாத்திரமே யல்ல என்னையும் தெய்வ கடாக்ஷத்தாற் கிடைத்த கதையாற் புடைத்தான். இது வரையில் ஞாபகமே யில்லாமற் கிடந்தேன்; இப்போதுதான் குளிர்ந்து நிலவோடுகூட மந்தமாருதம் வீசவே கொஞ்சம் நினைவு வந்தது" என்றான். அது கேட்டு யாவரும் அவ்வள வையே பெரிதாய் நினைத்து அரசனை முன்னிட்டுக் கொண்டு கூடாரத்தண்டை போய் நாளளவில் அவன் தேகத்திலிருந்த காயங்களை ஆற்றினார்கள்.

ராஜஹம்ஸ மகாராஜன் "நமக்கு என்ன அவமா னம் நேர்ந்தது பார்த்தையா! இப்போது நாம் என்ன வெட்கங் கெட்ட பிழைப்புப் பிழைக்கிறோம்" என்று ஒருவர் முகத்திலும் விழிக்கப் பிரியமில்லாமல், உள் ளேயே வெட்கி மனங் குமுங்கிக்கொண் டிருந்தான். அவன் படுகிற துன்பந் தெரிந்து அவனுடைய மனை யாட்டியும் மந்திரி முதலியவர்களும் வந்து, "ஓ

நாதனே! உமக்குத் தெரியாதது ஒன்றுமில்லை! அப்படியிருக்க, எல்லாந் தெரிந்தவர்களும் ஒன்றுமறியாதவர்போல இப்படி மனங் கலங்கலாமா? அதிர்ஷ்டமும், ஐசுவரியமும் ஒருவர் பங்கல்ல. முன்னுளில் புருஷோத்தமனை ஸ்ரீராமனும் ராஜ்ஜியத்தைத் துறந்து தண்டகாரணியத்திற் சென்று பிராட்டியைப் பறிகொடுத்து எப்பாடு பட்டார்? அப்படியே அரிச்சந்திரன், நளச் சக்கிரவர்த்தி, பஞ்ச பாண்டவர்கள் முதலான மகாராஜாக்கள் மனதினுலும் அளவிடக்கூடாத சங்கடங்களை அனுபவித்துப் பின்பு சுகப்பட்டது கேட்டதில்லையா? விதி யாரை விட்டது; யாவரும் தெய்வத்தின்கீழ்க் குடிதானே: ஜந்மாந்தரத்தில் அவரவர் செய்த பாப புண்ணியங்கள் அனுபவித்தாலொழியத் தீருமா! அதிர்ஷ்டம் ஒருவர் பங்கன்று. பொன்னிலைபு மின்னிலையும் ஒருவாருெக்கும்' என்கிற, பெரியோர் பேச்சு பொய்த்துப் போகுமா? நாமும் சிறிது நாளில் தெய்வ கடாக்ஷம் பெற்றுச் சுகமாய் வாழ்வோம்'' என்று அவன் மனக்கவலை நீங்கப் பற்பல கதைகளைக் கூறினர். அவனும் அவர்கள் கூறியதை அங்கீகரித்துக் கிஞ்சித்துத் தைரியமடைந்து தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளவேண்டுமென்று அங்கே எழுந்தருளியிருந்த வாமதேவர் என்கிற ஒரு ரிஷியின் ஆசிரமத்திற்குச் சென்று அம்முனிவரை வணங்கி, அவர் அனுமதியால் அவருடைய பர்ணசாலையின் பக்கத்தில் ஒரு கூடாரம் போட்டு அதில் சுகமாய் வாசம்பண்ணிக் கொண்டிருந்தான்.

சில நாள் கழிந்தபின் ராஜஹம்ஸன், அந்த வாமதேவ மஹாமுனிக்குத் தன்னிடத்தில் பரிபூரண கடாக்ஷ மிருக்கிறதென்று தெரிந்து, இவருடைய

பேருதவியாலேதான் நாம் நாடுபெற வேண்டுமென்று நிர்ணயித்து, ஒருநாள் ஒரு விண்ணப்பஞ் செய்தான். "ஸ்வாமி! அடியேன் மகதநாட்டை ஆண்டுகொண்டிருந்தேன்; மாளவதேசத் தாசனுன மானஸாரன் தெய்வ பலத்தால் என்னைப் படைமடியப் புடைத்துத் துரத்திவிட்டுத் துராகிருதமாய் என் நாட்டை அனுபவிக்கிறுன்; ஆதலால் அடியேனுக்குச் கைசேர்ந்த ராஜ்யம் கிடைக்க ஒரு தவஞ் செய்யும்படி கிருபை செய்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். அதற்கு அத்தவசி, முக்காலமு முணர்ந்தவ ராதலால் வருங் காலத்தை நன்ருய் ஆராய்ந்து, "ஓ மகா ராஜனே! வீணுய்த் தவஞ்செய்து உடலை உலர்த்துவதிற் பயனில்லை; இந்த வசுமதியின் கர்ப்பத்தில் ஒரு வெற்றி வீரன் உதிப்பான்; அவனுல் யாவருக்கும் சுகமுண்டாகும்; அதுவரையில் மனஞ் சோராமல் சந்தோஷமாயிரும்" என் றருளிச்செய்ய, அத்தருணத்தில் 'அப்படித்தான்' என்று ஆகாயத்தில் ஓர் உபசுருதியுண்டாயிற்று. அதைக் கேட்டு அரசன் சந்தோஷமடைந்து அப்படியே ஆகட்டுமென்று அம்முனிவர் சொற்படியே தனக்கு நல்ல காலம் வருவதை எதிர் பார்த்திருந்தான். அவன் தேவியும் பத்து மாதம் நிறைந்து பதினோரா மாதத்தில் சகல ராஜ சின்னங்களோடுங் கூடிய ஒரு குழந்தையைப் பெற்ருள். தனக்குக் குமாரன் பிறக்கவே ராஜா, ஆநந்த பூரிதனுய்ப் பிராமணோத்தமர்களை அழைப்பித்து, அந்தக் குழந்தைக்கு ஜாதகருமம் பண்ணி 'ராஜவாஹனன்' என்று நாமகரணமுஞ் செய்தான். அதே காலத்தில் சுமதி, சுமந்திரன், சுமித்திரன், ஸுசுருதன் என்கிற நான்கு மந்திரிமார்களுக்கும், பிரமதி, மித்திரகுப்தன், மந்திர

குப்தன், விச்ருதன் என நான்கு புத்திரர் பிறந்தார்கள். ராஜவாஹனன் இந்த நான்கு பிள்ளைகளோடு கூட சிறு வயதிலேயும் அதிக சுறுசுறுப்பும் யுக்தியுமாய் விளையாடிக்கொண் டிருந்தான்.

இப்படியிருக்கையில், ஒரு நாள் ஒரு தவசி ராஜ சன்னிதானத்திற்கு ஒரு குழந்தையை எடுத்துக் கொண்டு வந்தார். அது கண்டு அரசன் அவரை நமஸ்கரித்து இப்போது இங்கு எழுந்தருளிய காரியமென்ன வென்று கேட்க, அவர் சொல்லத் தொடங்கினர். "ஓ ராஜனே! நான் வைதிகச் சடங்குகளுக்கு வேண்டிய தர்ப்பை, சமித்து முதலியவைகளைச் சேகரிப்பதற்காகக் காட்டுக்குப் போகையில் அங்கே ஒரு பெண்பிள்ளை கண்ணீர் விட்டுக் கதறி அழுதுகொண் டிருந்தாள். அதுகண்டு நான் ஐயோ பாவம்! ஏனே அழுகிறளே யென்று அவளண்டை போய், 'அம்மா! நீ யார்? நிர்மானுஷியமான இந்தக் காட்டில் வந்து ஏன் விக்கி விக்கி அழுகிருய்' என்று கேட்டதற்கு, அவள், 'சுவாமி! நான் மிதிலாபுரத்து அரசனை பிரஹார வர்மாவினுடைய மகனுக்குத் தாதியா யிருந்தேன்; அந்த அரசன் தன் தோழனை மகதராஜனுடைய சீமந்த கலியாணத்திற்காக தன் பரிவாரத்தோடு கூட புஷ்பபுரத்திற்குப் போய்ச் சிலநாள் அங்கேயே யிருக்கையில், மகத தேசாதிபதிக்கும், மாளவ தேசாதிபதிக்கும் சண்டை உண்டாயிற்று. விதேக ராஜன் அதில் தன் நண்பனுக்குத் துணை செய்யப் போய்ப் பகைவர் கையில் அகப்பட்டுப் பிராணனேடு ஊர்போய்ச் சேர்ந்தாற் போதுமென்றிருக்க, சத்துருவும், தயை செய்து அவரை விட்டுவிட்டான். விட்டுவிடவே, அவர் கொஞ்சம் மிகுதியா யிருந்த

சேனையோடு வழிதுறையில்லாமல் தன் பட்டணத்தை நோக்கிச் சென்றார். செல்லுகையில் நடுவே வேடர் வந்து மடக்கி அடித்தார்கள். அதுகண்டு அவர் அந்தப்புரத்தைப் பின்னே நிறுத்திவிட்டு முன்னதாய்ப் போய்விட்டார். அப்போது அவருக்கு இரட்டையாய்ப் பிறந்த இரண்டு பிள்ளைகளிருந்தன. அவ்விரண்டிற்கும் நானும் என் மகளும் தாதிகளா யிருந்தோம். நாங்கள் அவரோடுகூட ஓடமாட்டாமல் பின் தங்கிப் போகையில், ஒரு வேங்கை நெற்றியை நெறித்துக்கொண்டு எங்கள் மேல் பாய்ந்தோடி வந்தது; நான் அதுகண்டு பயந்து கண் சுழலமிட ஒரு பெரும் பாறையிற் றடுக்கி விழுந்தேன். என் கையிலிருந்த குழந்தை கைதவறிப் பக்கத்திலிருந்த ஒரு செத்த பசுவின் வயிற்றண்டை போய் விழுந்தது. அப்போது அந்த வேங்கை அப் பிணத்தைப் பிடுங்கிக்கொண்டிருந்தது. சில வேடர் வந்து அந்தப் புலியைக் கொன்றுவிட்டு அக் குழந்தையை எடுத்துக்கொண்டு எங்கேயோ ஓடிப்போனார்கள். மற்றொரு குழந்தையை எடுத்துக்கொண்டு, என் மகள் எங்கே போனாளோ தெரியாது. அங்கே நான் எழுந்திருக்க மாட்டாமல் துயரப்படுவதைக் கண்டு இடையனொருவன், ஐயோ! யாரோ கிழவி தவிக்கிறாள் என்று வந்து, என்னை மெல்லத் தன் குடிசைக்கு அழைத்துக்கொண்டு போய் என்னை ஆறுதற் படுத்தி என்மேலிருந்த காயங்களையும் போக்கடித்தான்; அதனால் இப்போது உடம்பு கொஞ்சம் எழுந்து நடக்கும்படியாயிற்று. குழந்தைகளும் போய்விட்டன; பெண்ணையும் பறிகொடுத்தேன். நாமாவது நம் நாதனண்டை போய்ச் சேருவோம் என்று புறப்பட்டேன். துணை

யும் நேரிடவில்லை; எப்படியாயினும் போகவேண்டு வதுதான்' என்று சொல்லி உடனே புறப்பட்டுப் போயினுள்.

உன் நண்பனுக்கு விபத்து நேரிட்டதும் குழந்தைகள் காணுமற் போனதும் கேட்டு நானும் சோக மடைந்து அப் பிள்ளைகளைத் தேடிக்கொண்டு போனேன். ஒரு காளி கோயிலண்டை சில வேடர் கூட்டங்கூடித் தங்களுக்கு எப்போதும் இவ்விதமாய் ஜயமே நேரிட்டுக்கொண் டிருக்கவேண்டு மென்று அந்தக் காளியைப் பிரார்த்தித்து அதற்குப் பலி கொடுப்பதற்காக ஒரு சிறுவனை வைத்துக்கொண்டு, இப்பிள்ளையை மரக் கிளையில் கட்டித் தொங்கவிட்டுக் கத்தியால் வெட்டுகிறதா, காலைக் கீழே புதைத்துப் பாணத்திற் கிலக்காக்குகிறதா, அன்றி இப் பிள்ளையை ஓடவிட்டு நாய் முதலியவைகளைத் தூத்திக் கடிக்க விடுகிறதா என்று இப்படிப் பலவிதமாய் அக் குழந்தையைக் கொல்லும் உபாயங்களை ஒருவரோ டொருவர் பேசிக்கொண் டிருந்தனர். அதுகண்டு நான் இது அந்தக் கிழவி வைத்துக்கொண் டிருந்த பிள்ளைதா னென்று அங்கே போய் உடம்பு குலைக்கக் குலைக்க, 'அப்பா பிள்ளைகாள்! நான் இங்கே வரும்போது அஸ்தமித்து இருள் மூடி வழி தெரியாமற் போனதனல், என் பாலகுமாரனை ஒரு மரத்தடியில் விட்டு, தட்டித் தடுமாறிக்கொண்டு வழியைக் கண்டு பிடிப்பதற்காகக் கொஞ்சதூரம் போய் மறுபடியும் வந்து பார்க்கையில் அங்கே என் குழந்தை அகப்படவில்லை; அது எங்கே போயிற்ருே, யார் கொண்டுபோனுர்களோ தெரியவில்லை; முழுதும் தேடியாயிற்று; அவன் முகத்தைப் பாராமல் எனக்கு ஒரு நாழிகை ஒரு

யுகமா யிருக்கின்றது ; என்ன செய்வேன், எங்கே போவேன் ; நீங்களாவது கண்டீர்களோ' என்று விநயமாய் வேண்டினேன். அவர்கள் இதோ நாங்கள் ஒரு குழந்தை வைத்துக்கொண் டிருக்கிறோம் ; உன் பிள்ளையானால் சுகமா யிட்டுக்கொண்டு போகலா மென்றார்கள். நானும் அதிக சந்தோஷ மடைந்து அவர்களை வாழ்த்தி, இப் பாலகனை எடுத்துப் பலவிதமாய் உபசாரம் செய்து இதைத் தாய்தந்தையர்களைப் பார்க்கிலும் பதின் மடங்காகப் போஷிக்க வல்லவன் நீதானென்று உன்னிடங் கொண்டு சேர்த்தேன்" என்றார். அரசனும் அதை வாங்கி மடியில் வைத்துக் கொண்டு சந்தோஷ மடைந்து அதனால் தன் தோழனுக்கு நேரிட்ட துன்பத்தையும், கொஞ்சம் மறந்து, அச் சிறுவனுக்கு 'உபஹாரவர்மா' என்று பெயரிட்டுத் தன் பிள்ளையைப்போலவே பாதுகாத்துவந்தான்.

மறுநாள் அரசன் ஒரு வேடச்சேரி யோரமாய் அனுஷ்டானத்திற்குப் போகையில் ஒரு பெண் ராஜ குமாரனொருவனை வைத்துச் சீராட்டிக்கொண் டிருந்தாள். அதுகண்டு அவன் அவளண்டை போய், "பெண்ணே! இந்தக் குழந்தையைப் பார்த்தால் உங்களுக்குப் பிறந்ததாய்த் தோன்றவில்லை ; இவன் எந்த ராஜாவினுடைய குமாரன்; இவன் உன்னண்டை வந்த வரலா றென்ன? யதார்த்தத்தைச் சொல்ல வேண்டும்" என்று கேட்க, அவள் 'ஐயனே! அப்படியே சொல்லுகிறேன் ; மிதிலா நகரத்து ராஜா எங்கள் சேரியின் வழியாய்த் தன் பட்டணத்திற்குப் போனார் ; இச் சேரியிலிருந்தவர்கள் அவரை வழி மடக்கி அடித்தனர்; அப்போது என்புருஷன் இக்குழந்தையைக் கொண்டுவந்து என் கையிற் கொடுத்துக்

காப்பாற்றச் சொன்னார்; அப்படியே நான் காப்பாற்றிக் கொண்டிருக்கிறேன்; அவ்வளவுதான் எனக்குத் தெரியும்' என்றாள். அரசன், அம் முனிவர் சொன்னபடி இது நம் தோழனுடைய குழந்தைதானென்று அறிந்து, தந்திரமாய் நல்வார்த்தை சொல்லி அக் குழந்தையை வாங்கிக்கொண்டு வந்து 'அபஹாரவர்மா!' என்று பேரிட்டுத் தன் மனையாள் கையிற் கொடுத்துப் போஷிக்கச் சொன்னான்.

மற்றொருநாள் வாமதேவருடைய சிஷ்யனான சோமசர்மா என்பவன் ஒரு சிறுவனை ராஜசபையில் கொண்டு வந்து விட்டுச் சொன்னதாவது: "ஓ மன்னவனே! நான் ராமதீர்த்தத்திற்குப் போய் அங்கே என் நியமங்களை முடித்துக்கொண்டு திரும்பி வருகையில் இடையே நடுக் காட்டில் ஒரு கிழவி இக்குழந்தையை வைத்துக்கொண் டிருந்தாள்; அதுகண்டு நான், 'அம்மா! நீ யார்? குழந்தையோடு கூட இக் காட்டில் என் அல்லாடுகிறாய்?' என்றதற்கு, அவள் 'அப்பா! காலயவனம் என்கிற தீவிலே காலகுப்தன் என்று ஒரு செல்வ வணிகன் இருக்கிறான்; அவனுக்குச் சுவிருத்தை என்று ஒரு மகளுண்டு; அவளை இத் தேசத்தினின்றும் அங்கே போயிருந்த மகததேசாதிபதியின் மந்திரி குமாரனான ரத்னோத்பவனென்பான் விவாகஞ் செய்துகொண்டு அத்தேசத்திலேயே வெகு நாள் வாஸமாயிருந்தான்; அவன் மனையாட்டியும் சில நாளில் கருத்தரித்தாள்; அப்போது ரத்னோத்பவன் தன்னுடன் பிறந்தோர்களைக் காணவிரும்பி அளவற்ற யௌதகங்களோடுமனையாளையும் அழைத்துக்கொண்டு கப்பலேறி வருகையில், நடுவழியில் பேரலையலைத்துத் தண்ணீர் நிரம்பிக் கப்பல் மூழ்கிப்போயிற்று. அது

கண்டு அவன் மனையாளுக்குத் தாதியாயிருந்த நான், பூரண கர்ப்பிணியான அவளைக் கையாலணைத்துக் கொண்டு மெல்லமெல்ல அருகே கிடந்த ஒரு கட்டு மாத்திலேறித் தெய்வகடாக்ஷத்தால் கரைவந்து சேர்ந்தேன். தன் பரிஜனங்களோடுகூட ரத்னோத்பவன் மூழ்கிப்போனானோ மற்றெவ்விதமானானோ தெரியாது. அவன் மனையாட்டி சோகஸாகரத்தில் ஆழ்ந்து கிடந்தாள். அப்படியிருக்கையில், ஒரு குழந்தையும் பிறந்தது. அவளோ பிரசவவேதனையால் மெய்வருந்திக் கணவனைக் காணாத துக்கத்தால் மனம் வெந்து மூர்ச்சைபோய் ஒரு மாத்தின் நிழலிலே படுத்திருக்கிறாள். நிர்மானுஷியமான இந்த நடுக்காட்டில் குழந்தையையும் தாயையும் வைத்துக்கொண்டிருக்க மனமில்லாமல் ஏதாவது ஓர் ஊருக்குப் போகும்படி வழிபார்க்க வந்தேன். உடம்பு தெரியாமல் இட்டகால் இட்டகைகளாய்க் கிடக்கிற அவளண்டை இப்பாலகனை எப்படி விட்டு வருகிறது என்று இதையும் எடுத்துக் கொண்டு வந்தேன்' என்றாள். இவ்வளவில் அவ்வரணியத்தினடுவே ஒரு காட்டானை புறப்பட்டு ஓடிவந்தது. அவள் அதைப்பார்த்துப் பயந்து மெய்நடுங்கிக் குழந்தையைக் கீழே போட்டுவிட்டு ஓடிப்போனாள். என்ன நடக்கிறதோ பார்ப்போமென்று நான் பக்கத்திலிருந்த ஒரு புதரில் ஒளித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். அந்த யானையானது கீழே கிடந்த குழந்தையைக் கவளம்போலக் கௌவி யெடுத்தது. அத்தருணத்தில் ஒரு சிங்கம் மிக்க வெறியுடன் கர்ச்சித்துக்கொண்டு துரத்தவே, அக்காட்டானை நடுநடுங்கி அப்பாலகனை வானத்தில் வீசி யெறிந்தது. அக்குமாரன் தீர்க்காயுள் உடையவனாதலால் வாரணம் வீசியெறிந்தும் சேதப்

படாமல் சமீபத்திலிருந்த ஒரு மாக்கிளைமேல் வந்து வீழ்ந்தான். அங்கே ஒரு குரங்கு அதைப் பழமென்று எடுத்துப் பார்த்து விசாலமான ஒரு கிளையின் அடிப் புறத்திற் கொண்டு சேர்த்து அது நினைத்தபடி பழமல்லாமையால் விட்டுப் போய்விட்டது; அந்தச் சிங்கமும் யானையைக் கொன்றுவிட்டு அப்புறம் போயிற்று. இந்த விநோதமெல்லாம் நடந்த பின்பு நான் புதரினின்றும் வெளியே வந்து சூரியன்போலப் பிரகாசிக்கிற இச்சிறுவனை மாத்தடியினின்றும் மெல்ல எடுத்துக் கொண்டு அக்கானகமெல்லாம் திரிந்தேன்; எங்கும் அத்தாய்க் கிழவியைக் காணாமையால் எம்மாசிரியரான வாமதேவர் சந்நிதிக்குப்போய் நடந்தவை யாவும் விண்ணப்பஞ்செய்தேன்; உம்மிடத்து விட்டுவரும்படி நியமித்தார்; அப்படியே இதோ கொண்டு வந்தேன், வாங்கிக்கொள்ளவேண்டும்" என்றான். அதைக்கேட்டு ராஜஹம்ஸன் அந்தக் குழந்தையையும் வாங்கிக் கொண்டு, நமக்கும் நம் நண்பர்களுக்கும் ஒரே காலத்தில் என்ன விபரீதமான தெய்வச்செயல் பார்த்தையா என்று துக்கமோரண்டையிருக்க, ஆச்சரியமுமடைந்து அப்பிள்ளைக்குப் 'புஷ்போத்பவன்' என்று பேரிட்டு, இச்செய்தி யெல்லாம் சுச்ருதனோடு சொல்லி, சிறிது நேரம் விசனப்பட்டு, அவன் தம்பி குமாரனை அவன் கையிலேயே கொடுத்துக் காப்பாற்றச் சொன்னான்.

ஒருநாள் விடியற்காலை வேளையில் தேவகன்னிகையொருத்தி ராஜமகிஷியண்டை வந்து ஒரு பிள்ளையைக் கொண்டுவிட்டு, "என் நாயகியே; நான் உங்கள் மந்திரி குமாரனான காமபாலனுடைய மனையாள்; மாணிபத்திரன் என்கிற யக்ஷனுடைய மகள்; எனக்குத் தாராவலி என்று பெயர்; இக்குழந்தையோ காமபால

னுக்கு என்னிடத்தில் உற்பவித்தது. என் தந்தை யானவர் இச்சிறுவனை இனி அகண்ட பூமண்டலாதி பதி யாகும்படியான உம்முடைய குமாரனுக்குத் துணைவனாக விட்டுவரும்படி கட்டளையிட்டார். இவனை வளர்த்தெடுப்பது உமது கடமை" என்று கூறினாள். அதைக்கேட்டு ராணியானவள் ஆச்சரியமடைந்து, அந்த யக்ஷகன்னிகைக்குப் பல உபசாரங்கள் செய்ய, அந்தத் தெய்வப்பெண் அவைகளைப் பெற்றுக்கொண்டு உடனே கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து போயி னாள். இச்செய்தியெல்லாம் தேவியானவள் கணவ னுக்குத் தெரிவிக்க அவன் அக்குழந்தையின் பெரிய தந்தையான சுமித்திரன் கையில் அப்பிள்ளையை வளர்க் கும்படி கொடுத்தான். அந்த குமாரனும் அர்த்த பாலன் என்று பெயர்பெற்றுப் பெரிய தகப்பன் வீட்டிலே சுகமாய் வாழ்ந்திருந்தான்.

இவர்களிப்படியிருக்க வாமதேவருடைய சீஷரில் ஒருவர், புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் பண்ணி வரவேண்டுமென்று யாத்திரைபோய், தற்செயலாய் ஒரு நாள் காவேரி யாற்றண்டை சென்று நீராட்டத் திற்கு ஆற்றங்கரைக்குப் போனபோது, அந்த நதிதீரத் தில் ஒரு பெண்பிள்ளை, தலைமயிரெல்லாங் காற்றிற் பறந்து அலைந்துகொண்டிருக்க ஒரு குழந்தையை மடி யில் வைத்துக்கொண்டு கண்ணுங் கண்ணீருமாய்ப் புலம்பிக்கொண்டிருந்தாள். அதுகண்டு அம்முனீந்திரர், "ஓ பெண்ணே! நீ யார்? எங்கிருப்பவள்? இங்கு நீ வந்தவாறென்ன? இக்குமாரன் யாருடைய புத்திரன்? நீ விசனமுற்றிருப்பது யாது நிமித்தம்? யாவையும் யானறியச் சொல்லக் கடவாய்" என்று கேட்க, அவள், இவர்தான் நம்முடைய துக்கம் தீர்க்கவந்த தெய்வ

மென்று நினைத்து இரண்டு கைகளாலும் கண்ணீரை அழுந்தத் துடைத்துக்கொண்டு "ஓ தபோதனரே! ராஜஹம்ஸனுடைய மந்திரியான ஸிதவர்மா என்பவருக்கு ஸத்தியவர்மா என்று ஒரு குமாரர் இருக்கின்றார். அவர் தீர்த்த யாத்திரையாய் இத்தேசத்திற்கு வந்து ஒரு அக்கிரகாரத்தில் காளி யென்கிற ஒரு பிராமணப்பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கொண்டார். அவள் மலடியாய்ப் போனதால் அவள் உடன்பிறந்தாளையும் விவாகஞ் செய்துகொண்டார். அவளிடத்தில் ஒரு பிள்ளை பிறந்தது. அவருடைய மூத்தமனையாளாகிய காளி யென்பவள் தங்கையாயினும் மாற்றாட்டி யென்பது பற்றிப் பொறாமைகொண்டு, அவ் விளையாள் மகன் மரிக்கும்படி ஒருவழிதேடி, அக் குழந்தைக்குக் காவலாயிருந்த என்னை குழந்தையோடுகூட ஒரு சாக்கிட்டு இக்காவேரிக்கரைக்கு வரவழைத்து ஆற்றிலே தள்ளிவிட்டாள். நாம் போனாற் போகிறோம், குழந்தை போய்விடுகிறதே யென்று பரிதபித்து நான் ஒரு கையால் குழந்தையைத் தழுவிக்கொண்டு மற்றொரு கையால் தண்ணீரைத் தள்ளித் தள்ளி நீந்தி வந்தேன். வரும்போது ஒரு மரக்கட்டை அங்கு மிதந்தது. அதைப் பார்த்து நான் ஸந்தோஷமடைந்து குழந்தையை அதில் உட்காரவைத்து நீர் வருகிறவழியே வந்துகொண்டிருந்தேன்; அச்சமயத்தில், அம்மரக்கட்டையிலிருந்து விஷப்பாம்பு ஒன்று என்னைத் தீண்டிற்று; ஆயினும் தெய்வகடாக்ஷத்தால் அக்கட்டை உடனே கரைவந்து சேர்ந்தது. விஷமோ அதி வேகமா யேறிக்கொண்டிருக்கின்றது. நான் இறந்துபோனால் இப்பாலகனைக் காப்போர் ஒருவருமில்லையே என்று துக்கிக்கிறேன்" என்றாள். இவ்

வளவுக்குள்ளே விஷம் தலைக்கேறிப் பரவசையாய் அவள் தரையில் விழுந்தாள். அத்தபோதனர் அது கண்டு விசனமுற்று மந்திரத்தினுல் விஷத்தைத் தடுக்கத் திறமையற்றவராய் மூலிகை தேடப்போனுர். அதைத் தேடிப் பார்த்துக்கொண்டு வருவதற்குள், அவளுக்குப் பிராணன் போய்விட்டது. அவர் வந்து பார்த்து, "ஐயோ! அநாதப் பிரேதமாயிற்றே என்று அதை எடுத்துத் தகனஞ்செய்து விட்டு, அப்பிள்ளையின் பெற்ருே ரிருப்பிடம் இன்னதென்று தெரியாமையால் அக்குழந்தையை எடுத்துக்கொண்டு ராஜஹம்ஸனண்டை வந்து நடந்த விருத்தாந்தங்களை யெல்லாம் விவரமாய்ச் சொன்னுர். கோமகனும் அக்குழந்தையை வாங்கி ஸத்தியவர்மாவின் நிலைமை நன்ருகத் தெரியாமையால் துயர முற்று "ஸோமதத்தன்" என்று அப்பிள்ளைக்குப் பேரிட்டு சுமதி என்பவனிடத்தில் சேர்த்தான். அவன் தன் ஸோதரனே வந்ததாகப் பாவித்து அதிக ஆதரவோடு அக்குழந்தையை வளர்த்துவந்தான்.

இப்படி உலகத்தில் நன்மை செய்வதற்காகத் தெய்வத்தால் ஓரிடத்தில் கொண்டுவந்து சேர்க்கப்பட்ட மந்திரி குமாரர் ஒன்பதின்மரோடு ராஜகுமாரனுகிய ராஜவாஹனனும் கூடி விளையாடிக்கொண்டு வாலிபத்திலேயே யானை, குதிரை முதலிய வாகனங்கள் ஏறுவதில் தேர்ச்சியடைந்தான். ராஜஹம்ஸ சக்ரவர்த்தி இந்தப் பிள்ளைகளுக்கெல்லாம் காலங்களில் சௌளம் உபநயந முதலிய சடங்குகளை சரியாய்ச் செய்வித்து, அந்தந்த விஷயத்தில் பண்டிதரான ஆசிரியர்களைத் தேடி அவர்களிடத்தில் ஒவ்வொரு வித்தையும் ஈடேறக் கற்கும்படி குமாரர்களை அனுப்பினுன். அந்தச் சிறுவர்

களும் ஏகசந்தக்கிராகிகளாய் உபாத்தியாயர் சொல்லு கிற ஒவ்வொரு விஷயத்தையும் மறவாமல் கருத்தில் அழுத்திச் சகல சாஸ்திரங்களிலும் மிகச் தேர்ச்சி யடைந்து தனுர்வித்தையில் அதிக வல்லவர்களாகி உலகத்திற்குப் பூஷணங்களா யிருந்தனர். ராஜஹம்ஸ னும் அப்பிள்ளைகள் அவ்வளவு மேன்மை பெற்றிருப் பது கண்டு ஆநந்த பூரிதனாய்த் தன்னிஷ்டங்களெல் லாம் கைகூடினவென்றே நினைத்தான்.

இப்படியாக அந்தக் குமாரர்களெல்லாம் சகல கலைகளிலும் தேர்ச்சியடைந்து சிறப்புற்றிருக்குங் காலை யில் ஒருநாள் வாமதேவமுனிவர் ராஜஹம்ஸ னிருக்கு மிடத்திற்கு வந்து, அங்கே அந்த மஹாராஜன் மிகுந்த அழகும் ஆற்றலு முள்ள அப் பிள்ளைகளோடு விநோதமாயிருக்கக் கண்டு, மிக்க களிப்புற்றிருக்க, அந்த முனிவரைக் கண்டு அக்குமாரர்களும் பேரா னந்தமடைந்து அவர் திருவடிகளில் வந்து வணங்க, அந்த மஹரிஷி அவர்களை எடுத்து மார்போடணைத்து ஆசீர்வாதம் பண்ணி அந்த ராஜனைப்பார்த்து ஒரு வார்த்தை சொன்னார். "ஓ மஹாராஜனே! உம்முடைய மனோரதப்படி, தன் தோழன்மாரோடு கூடிய உமது குமாரனுக்குத் தக்க வயது வந்திருக்கிறது. இது தான் இவர்கள் திக்குவிஜய யாத்திரை செய்யத்தக்க காலம்; இவர்கள் எவ்விதமான சங்கடம் நேர்ந் தாலும் சலியார்கள்; ஆதலால் இப்போதே இவர் களைப் பிரயாணம் பண்ணி அனுப்பலாம்" என்றார். அதுகேட்டு அந்தச் சக்ரவர்த்தி, அம்முனிவருக்குத் தண்டனிட்டு அவருரைத்தபடியே சேனைகளைச்சித்தப் படுத்தி தன் குமாரனுக்கு மற்றப் பிள்ளைகளையெல் லாம் மந்திரியாக்கி, அவரவருக்குத் தக்கபடி புத்தி

களைச் சொல்லி, ஜோதிஷ சாஸ்திரிகள் பார்த்துவைத்த நல்ல முகூர்த்தத்தில் திக்குவிஜயம் பண்ணிவரும்படி அனுப்பினன்.

அப்படியே ராஜவாஹனனும் தந்தைசொல் தவருமல் உடனே புறப்பட்டுப் போகையில் வெளியே நற்சகுனங்கள் உண்டாகக் கண்டு தன் காரியம் கைகூடினதாக எண்ணிக் கொண்டு சிறிது தூரம் போய் விந்திய மலைக் காட்டில் நுழைந்தான். அங்கே ஒருவன் உடம்பெல்லாம் அம்புபொத்திக் காய்த்த காய்ப்போடு பார்வைக்குப் பயங்கரமாயும் மார்பில் ஒரு பூணூல் தரித்துக்கொண்டு மிருந்தான். ராஜவாஹனன் அவனைக் கண்டு, "ஸ்வாமி! நீர் யார்? மனுஷிய சஞ்சாரமில்லாததாயும் முள்ளுங் கல்லுமாய்ப் புலி காடிகளுக்கே உரியதாயு மிரானின்ற இக்கானகத்தில் ஒருவராய் ஏன் அலைகின்றீர்? பூணூலைப் பார்த்தால் பிராமணனென்று தோன்றுகிறது; காயங்களைப் பார்த்தாலோ வேடனென்று நினைக்கும்படி இருக்கிறது; இதன் உண்மை என்ன" என்று கேட்க, அந்தப் புருஷன் இவனைப் பார்த்து, இவ்வளவு வடிவழகு ஸாதாரண மனிதனுக்கு இருக்கமாட்டாது; இவன் தெய்வப் பிறப்புதான் என்று அவனோடுகூட வந்தவர்களின் மூலமாய் அவனை இன்னனென்று நன்ருய்த் தெரிந்துகொண்டு தன் சரித்திரத்தைச் சொல்லத் துவக்கினன்.

ஓ ராஜகுமாரனே! சொல்லுகிறேன் கேள்: இக்காட்டில் தம் குலாசாரங்களை யெல்லாம் சிறிதேனும் நினையாமல் வேதங்களையும் அறியாமல் பாவத்தையே தேடிக்கொண்டு, வேடர்களுடன் கூடி அவர்க

ளிட்ட சோற்றைப் புசித்துக்கொண்டு, சில பார்ப்ப னப்போலிக ளிருக்கின்றனர். அவர்களுள் ஒருவன் மகன் நான்; எனக்கு மாதங்கன் என்று பெயர்; மனதி னுலும் நினைக்கக்கூடாத தீச்செயல்களைச் செய்திருக் கிறேன். நானும் அந்த வேடர்களோடுகூட ஊரு ராய்ப் படகுந்து செல்வமுள்ளவர்களை ஆண் பெண் அடங்கலுஞ் சிறையிட்டுச் சிறிதும் இரக்கமில்லாமல் அவர் பொருள்களைக் கொள்ளையாடித் திரிந்துகொண் டிருந்தேன். இப்படியிருக்கையில் ஒருநாள் ஒரு பிராமணன் வழியேபோகக் கண்டு, என்னுடனுளிகள் கூடி அவனைக் கொல்லப் புகுந்தனர். அப்போது எனக்குக் கொஞ்சம் பரிதாபமுண்டாகி, ஓ 'பாபிஷ்டர் களே! அந்தணரை அடிக்கவேண்டாம்' என்றேன். அவர்கள் புருவநெறித்துப் பல்லைக்கடித்து என்னை வெருட்டினார்கள். அவர்கள் சொன்ன கடுஞ்சொல்லைக் கேட்கமாட்டாமல் நான், அந்தப் பிராமணன் பக்க மாய் நின்று அவருக்காக நெடுநேரமளவும் போராடி, கடைசியில் அவர்களால் அடிபட்டு உயிருமிழந்தேன்.

உடனே யமலோகத்திற்குச் சென்று அங்கே, சபை நடுவே அநேகர் சூழ்ந்துநின்று துதிசெய்ய ரத்தின சிங்காதனத்தில் வீற்றிருக்கும் யமதர்மராஜ னைக்கண்டு சாஷ்டாங்கமாய் வந்தனம் பண்ணினேன். அவர் என்னைப்பார்த்துச் சித்திரகுப்தன் என்னும் தன் முதன்மந்திரியை அழைத்து, "அப்பா! இவ னுக்கு மரணகாலம் இதல்லவே; இவன் நடத்தை யெல்லாம் கெட்டதாகவேயிருந்தாலும், ஒரு பிராமண னுக்காக உயிரைக் கொடுத்ததனால் இனி இவனுக்கு நற்செய்கைகளிலேயே ஆலசயுண்டாகும். இவ்விடத் தில் பாவப் பயன்களை அனுபவிக்கின்றவர்களுடைய

வாதனையை மாத்திரம் சற்றே காட்டிவிட்டு, மறுபடியும் முன் சரீரத்திலே கொண்டுவிடு" என்று கட்டளையிட்டார். அந்தச் சித்திரகுப்தனும் தருமராஜன் நியமனப்படியே நரகவேதனை அனுபவிக்கிறவர்களையெல்லாம் எனக்குக் காட்டினான். ஓரிடத்தில் பழுக்கப் பழுக்கக் காய்ந்த இருப்புக் கம்பங்களில் அநேகரைக் கட்டிக்கொண்டிருந்தார்கள். மற்றோரிடத்தில் பொங்குகின்ற எண்ணெயில் பலரை வாரிவாரிப் போட்டுக் கொண்டிருந்தார்கள். சிலரைத் தடியாலடித்து இடுப்பை ஒடித்துக் கொண்டிருந்தார்கள். இன்னுமோரிடத்தில் சிலரைக் கல்லுளியால் பொளிந்து கொண்டிருந்தார்கள். இப்படியே இன்னும் பலவிடங்களில் பலபல வேதனைகளை அனுபவிப்பித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களையெல்லாம் கண்டபோது எனக்கு உடல்நடுங்கி மனம்வெருண்டு எப்போ வெளியே போகப் போகிறோம் என்று தோன்றிற்று. சித்திரகுப்தன் இவைகளையெல்லாம் காட்டி நல்ல புத்தியையும் உபதேசித்து மீண்டும் பூலோகத்துக்குப் போகும்படி என்னை விடுத்தான். உடனே நான் முன்விட்டுப் போன உடலில் வந்து புகுந்தேன்.

இவ்வளவுக்குள் அந்தப் பிராமணன் என்னுடலை எடுத்து ஒரு பாறைமேல் விட்டுக்கொண்டு ஒரு வேளை உயிர் வருமோ என்னவோவென்று சீதோபசாரம் செய்து கொண்டிருந்தான். இதற்குள் இச்செய்தி என் வீட்டிற்குத் தெரிந்து என் பந்து ஜனங்களெல்லாரும் ஓடிவந்து வீட்டுக்கழைத்துக் கொண்டுபோய் என் உடம்பிலிருந்த காயங்களை ஆற்றினார்கள். என்னிடத்தில் உபகாரநினைவுள்ள அந்தப் பிராமணனோத் தமன் எனக்குச் சகல வித்தைகளையுங் கற்பித்து,

வேத மந்திரங்களையும் நன்னடக்கைகளையும், பரமேசுவரனைப் பூசிக்கும் வழிகளையும் உபதேசித்து, நான் செய்த பூஜைகளைப் பெற்றுக்கொண்டு போயினான்.

அதுமுதல் நான், வேடர்களோடு கூடிவாழும் என்னினத்தாரை யொழித்து விட்டு எப்போதும் பரமேசுவரனையே தியானம் பண்ணிக்கொண்டு இக்காட்டிலேயே வாஸம் பண்ணுகின்றேன். இதுதான் என் வரலாறு. ஓ நாதனே! உன்னோடு மாத்திரம் விண்ணப்பஞ் செய்யத்தக்கதாய் ரகசியம் ஒன்று இரா நின்றது; ஏகாந்தத்தில் வந்தால் சொல்லுகிறேன்'' என்றான். அவனும் அப்படியே ஆகட்டுமென்று ஒப்புக்கொள்ள, அவனை ஒரு மூலையில் இட்டுக் கொண்டுபோய், 'ராஜனே! இன்றையதினம் விடியற்காலை வேளையில் நான் ஒரு கனவுகண்டேன்; அதாவது ஸ்வாமி எழுந்தருளி தூங்கிக்கொண்டிருந்த என்னை எழுப்பி முகமலர்ந்தவராய்ப் பக்கத்தில் தலை வணங்கி நின்ற என்னைப் பார்த்து, தண்டகாவனத்து நடுவிலோடுகின்ற ஆற்றங்கரையில் ஒரு சிவலிங்கமிருக்கின்றது; அதன் பின்புறத்தில் ஒருகுகையுண்டு; அங்கே செப்புத்தகட்டில் ஒரு பட்டோலை எழுதி வைத்திருக்கிறது; அதை எடுத்துக்கொண்டு அந்த பிலத்தின் வழியாய் நுழைந்து பாதாள லோகத்துக்குப் போய் அதில் சொல்லியிருக்கிறபடி நடத்தி, நீயே பாதாள லோகத்திற்கு அதிபதியாகக் கடவை; உனக்கு ஒத்தாசைசெய்ய ஒரு ராஜகுமாரன் விரைவில் வருவான் என்று அனுக்கிரகித்தார். அப்படியே நீயும் வந்து சேர்ந்தாய்; என் இஷ்டத்தைக் கைகூட்ட வேண்டும்' என்றான். ராஜவாஹனனும் அதற்குச் சம்மதித்துப் பாதிராத்திரியில், மற்றவர்களெல்லாம்

கண்ணயர்ந்து தூங்குகையில் அவர்களை நீங்கி மாதங்கனோடு கூடப் புறப்பட்டுப் போயினன்.

அங்கே படுத்துத் தூங்கியவர்களெல்லாம் காலையி லெழுந்து பார்த்து ராஜகுமாரனைக் காணமல் மனங் கலங்கி அக்காடு முழுதுந்தேடியும் அகப்படாமையால், சீமை முழுதும் தேடவேண்டுமென்றும், கடைசியில் யாவரும் ஓரே யிடத்தில் வந்து சேரவேண்டுமென்றும் சங்கேதஞ் செய்துகொண்டு, மூலைக்கொருவராய்ப் பிரிந்துபோனார்கள்.

அந்த மாதங்கனும், தனக்கு மகாசூரனை ராஜ குமாரன் துணையானதனால் மிகவும் சந்துஷ்டனாய், சுவாமி ஸ்வப்னம் சாதித்தபடி அங்கிருந்த பட்டோலையை எடுத்துக்கொண்டு ஆதன் பக்கத்திலிருந்த பிலத்தின்வழியாய்ப் பாதாளலோகத்திற்குச் சென்று, அவ்விடத்தில் ஒரு பட்டணத்திற்குச் சமீபத்தில் ஓர் உத்தியானவனத்தின் நடுவே ஒரு குளக்கரையில் அந்தப் பட்டோலையிற் சொல்லியபடி ஓமகுண்டம் வெட்டித் தீவளர்த்தி அநேக ஆகுதிகள் செய்து, தனக்குத் துணையாகவந்த ராஜவாஹனன் ஆச்சரியத் துடன் பார்த்துக்கொண் டிருக்க, அநேக மந்திரங்கள் ஜெபித்து, தன்னுடைய தேகத்தையே பூர்ணாஹுதி பண்ணி, உடனே அந்த அக்கினி மத்தியினின்றும் தேஜோமயமான தெய்வசரீரத்தோடு எழுந்திருந் தான். எழுந்திருந்த உடனே தேவகன்னிகை ஒருத்தி, உயர்ந்த ஆடையாபரணங்கள் அணிந்து தோழிப் பெண்கள் பின்தொடர்ந்து வர அன்னநடையாய் நடந்துவந்து ஒரு விலையில்லா மாணிக்கத்தை அவ ருக்குக் காணிக்கையாய்க் கொடுத்தாள். அவளைக்

கண்டு அந்தப் புருஷன், 'பெண்ணே! நீயார்? எங்கிருந்து வருகிறாய்?' என்று கேட்க, அவள், 'ஸ்வாமி பிராமணோத்தமரே! அடியாள் இந்தப் பாதாள லோகத் தாசனுடைய மகள். எனக்குக் சூாளிந்தி என்று பெயர். என் தந்தையானவர் ஏகசக்ராமாய் இப்பாதாளலோக முழுதும் ஆண்டுவந்தார். ஒருகால் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் யுத்தம் நடந்தபோது என் பிதா தேவர்களைக் கிட்ட நாடவொட்டாமல் துரத்தியடிக்க, ஸ்ரீமகாவிஷ்ணு இவர் பராக்கிரமத்தைப் பொறுக்கமாட்டாமல் உடனே யம லோகத்திற்கு அனுப்பினார். தந்தை இறந்துபோன துக்கத்தால் நான் கண்ணை விழியாமலே கிடந்தேன். அப்போது தயாளுவான ஒரு முனிவர் என்னண்டை வந்து, குழந்தாய்! விசனப்படாதே; ஒரு மகா புருஷன் வந்து உன்னைக் கலியாணம் பண்ணிக்கொண்டு இந்தப் பாதாள லோகத்தை ஆள்வான்; அப்புறம் உனக்கு யாதொரு குறையுமில்லையென்று அனுக்கிரகித்தார். அன்று முதல், வர்ஷாகாலத்தைச் சாதக பக்ஷி எதிர்பார்ப்பதுபோல், நான் உம்முடைய வரவை எதிர்பார்த்திருந்தேன். என் பாக்கிய விசேஷத்தால் வந்துசேர்ந்தீர். உமது வரவை யறிந்து என் மந்திரிமார்களெல்லாம் உம்மை அழைத்துக்கொண்டு வரும்படி சொல்லினார்கள். ஆதலால் இந்தப் பட்டணத்திற்கு வந்து என்னோடுகூட இந்த ராஜ்யத்தையும் ஆளவேண்டும்' என்றாள். மாதங்கனும் அதைக்கேட்டு ஸந்தோஷமடைந்து ராஜவாஹனனை அனுமதிகேட்டு அந்தப் பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டு அந்த ராஜ்யத்தையும் கைப்பற்றிச் சுகமாக வாழ்ந்திருந்தான்.

தோழர்களை வஞ்சித்து விட்டுவந்த ராஜவாஹன னும் தான் வந்த காரியம் முடிந்தமையால் அவர்களைப் போய்ப் பார்க்கவேண்டுமென்று ஆசைகொண்டு அந்த மாதங்கனிடம் விடைகேட்டான். அவனும் தனக்குப் பேருதவி செய்த ராஜ சமாரனுக்கு, பசி தாக முத லியவையொன்றும் உண்டாகாதபடி செய்ய வல்ல தான, தனக்குக் கிடைத்த ரத்நினத்தை வெகுமதி யாய்க் கொடுத்துப் பாதாளலோகந் தாண்டி பூலோகம் போமளவும் வழிகொண்டு விட்டனுப்பினான். ராஜ வாஹனன் தன் தோழன்மாரைத் தான் விட்டுப்போன விடத்திற் காணமல் பலவிடங்களிலுந் தேடிக்கொண்டு போகையில் ஒரு நாள் வெயில் பொறுக்கமாட்டாமல் இளைப்பாறுவதற்காக ஒரு தோட்டத்திற்குள் பிரவே சிக்க, அங்கே ஒருவன் பரிசாரகர்களெல்லாம் உப சாரஞ் செய்துகொண்டிருக்க மனையாளோடு கூட ஊச லாடிக்கொண்டிருக்கக் கண்டான். அவன் இந்த ராஜ குமாரனை நோக்கி உள மகிழ்ந்து, முகமலர்ந்து, இதோ என் நாதன், இதோ சந்திர வம்சத்தரசன், இதோ இராஜவாஹனன், என் பாக்கிய விசேஷத்தால் இவ ருடைய திருவடிவாரத்தில் வந்து சேர்ந்தேன்; இப் போதுதான் எனது இரண்டு கண்களும் ஸபலமாயின என்றிப்படி ஆனந்தப் பெருக்கால் உடம்பு தெரியா மல் பேசிக்கொண்டு ஊசலினின்றும் சரேலென்று குதித்தோடிவந்து ராஜவாஹனனுடைய பாதங்களில் வீழ்ந்தான். அரசனும் இவன் சோமதத்தன் என்று தெரிந்து, ஆனந்தக் கண்ணீர் பெருக உடம்பெல்லாம் மயிர் பொடிக்க எடுத்து ஆலிங்கனஞ் செய்துகொண்டு ஒரு சரப்புன்னை மரத்தின்கீழ் உட்கார்ந்து அவன் க்ஷேமங்களை வினவினான். அப்பா ஸோமதத்தா! நீ

இத்தனை நாள் எந்ததேசத்தில் எவ்விதமாய் வாஸம் பண்ணிணாய்? இப்போது எங்கே போகிறாய்? இந்தப் பெண் யார்? இந்தச் சேனைகளெல்லாம் உனக்குக் கிடைத்த விதமென்ன? சொல்லென்று கேட்டான். ஸோமதத்தனும் மிக வணக்கமாய் முறையே தன் சரித்திரங்களைச் சொல்லத்தொடங்கினான் :

"ஓ நாதனே! நாங்களெல்லாம் அன்றிரவில் தூங்கிக் காலையில் எழுந்து பார்க்கையில் உன்னைக் காணாமல் கண் கெட்டுப்போனவர்களாய்த் தேடும்படி புறப்பட்டோம். அப்படியே நான் தேடிக்கொண்டு வருகையில் வெயிலால் களைத்து விடாய்த்து ஓராற்றில் தண்ணீர் குடிக்கப் போனவிடத்தில் ஒரு மாணிக்கம் அகப்பட்டது; அதை எடுத்துக்கொண்டு போகையில் வெயில் பொறுக்கமாட்டாமல் சற்றே படுத்திருக்கலாமென்று அங்கிருந்த ஒரு கோயிலில் நுழைந்தேன். அங்கே ஒரு ஏழைப்பிராமணன் குஞ்சுங் குட்டிகளுமாய்த் தவித்துக்கொண்டிருந்தான். அவனைப் பார்த்து நீர் யாரென்று கேட்டதற்கு அவன், அந்தத் துக்கத்தை நீ ஏன் கேட்கிறாய்? குடிக்கக் கஞ்சி கிடையாது; இவையெல்லாம் தாயில்லாக் குழந்தைகள்; என்னவோ வைத்துக்கொண்டு அல்லாடுகிறேன்" என்றான். அதைக்கேட்டு நான் பரிதாபப்பட்டு அந்த மாணிக்கத்தை அவனுக்குக் கொடுத்துவிட்டு அங்கே சில சேனைகள் வந்து இறங்கியிருக்கக்கண்டு இதன் வரலாறென்னவென்று விசாரித்ததற்கு அவன் மத்தகாலன் என்கிற லாடதேசத்தரசன். இத்தேசத்தரசன் மகளான வாமலோசனை என்பவள் அழகில் பெருத்தவள் என்பது கேள்விப்பட்டு, அவளைத் தனக்குக் கொடுக்கும்படி வேண்டினான். அதற்கு அவள் தகப்ப

ஞனை வீரகேது சம்மதப்படாமையால் அவன்மேல் படையெடுத்தான். அதையறிந்து வீரகேது பயந்து தன் மகளை அவனுக்குக் காணிக்கையாகக் கொடுத்தான். தன் இஷ்டம் கைகூடவே மத்தகாலன் ஸந்தோஷமடைந்து தன் நகரத்திலேயே கலியாணஞ் செய்துகொள்ளும்படி தீர்மானித்துத் தன் பட்டணத்திற்குப் போகப் புறப்பட்டான். வீரகேதுவும் அளவற்ற வரிசைகளுடன் தன் மந்திரியான மானபாலனோடு தன் மகளைக் கூட்டியனுப்பினான். அவ்விரண்டு சேனைகளும் இங்கே வந்திறங்கியிருக்கின்றன. இப்போது வீரகேது மந்திரியான மானபாலன் தன் எஜமானனுக்கு நேரிட்ட அவமானத்தைச் சிறிதும் ஸகிக்கமாட்டாமல் இரண்டு கூடாரத்திற்கும் உள்ளேயே சுரங்கம் பண்ணியிருக்கிறானாம். இவ்வளவுதான் நான் அறிவேனென்று சொல்லிவிட்டு, வெளியே போயினான். நானும் வழி நடந்துவந்த வருத்தத்தால் கண்ணயர்ந்து தூங்கிப் போனேன். பின்னும் சில நிமிஷங்களுக்குள் அநேகர் உருவின கத்தி உருவினபடியே அந்தப் பிராமணனைப் பின்கட்டு முறையாய்க் கட்டி இழுத்துக்கொண்டு வந்தார்கள். அவன் என்னை எழுப்பி இதோ திருடன் என்று அவர்களுக்குக் காட்டினான். உடனே அவர்கள் அவனைவிட்டு என்னைக் கட்டி, எனக்கு அந்த ரத்தினம் கிடைத்த வித்தை நான் எவ்வளவு சொல்லியும் காது கொடுத்துக் கேளாமல், சிறைச்சாலைக்குக் கொண்டுபோய், இதோ உன் தோழர்கள் என்று அங்கே காலும் விலங்குமாய்க் கிடந்த சிலரை எனக்குக் காட்டி எனக்கும் விலங்கு போட்டுத் தள்ளிவிட்டுப் போய்விட்டார்கள்.

இவ்வளவு துன்பப்படுகையிலும் எனக்குக் கிஞ்சித்தும் மனங்கலங்கவில்லை. நடந்த காரியத்தின் வரலாற்றை விவரமாய்த் தெரிந்துகொள்ள வேண்டுமென்று அங்கே இருந்தவர்களைப் பார்த்து நீங்கள் யார்? ஏன் இப்படித் துன்பப்படுகிறீர்கள்? எனக்கு நீங்கள் தோழர் என்று சொன்னீர்களே, அதென்னவென்று கேட்டேன். அதற்கு அவர்கள் சொன்னதாவது: நாங்களெல்லாரும் மானபாலனுடைய படைத் தலைவர்கள். அவர் கட்டளையினால் மத்தகாலனைக் கொல்லும்படி சுரங்கவழியாய்ப் புகுந்துபோய் பார்க்கையில், அங்கே அவனைக் காணாமையால் அவன் பொருள்களைக் கொள்ளையாடிக்கொண்டு காட்டிற்கு ஓடிப்போயினோம். மறுநாட்காலையில் அவன் சேவகர்கள் அநேகர் தேடிக்கொண்டுவந்து எங்களைக் கையும் சொத்துமாய்ப் பிடித்து அரசன் முன்னிலையில் விட்டுப் பொருள்களைப் பரிசோதிக்கையில் அதில் சிறந்த மணியொன்று காணாமற் போயிற்று. அதைக் கொடாவிடில் கொன்றுவிடுவோமென்று எங்களைக் காவலில் வைத்தார்கள் என்று உரைத்தனர்.

அதுகேட்டு நான் எனக்கு அகப்பட்டது அந்த மணிதானென்று தெரிந்து, பிராமணனுக்கு அந்த மணியைக் கொடுத்ததனால் எனக்கு நேரிட்ட வருத்தத்தையும் நான் உன்னைத் தேடிக்கொண்டு வந்தது முதலிய என் சரிதங்களையும் சொல்லி அவர்களை நேசப்படுத்திக்கொண்டு, ஒரு நாள் இரவில் யாவருக்கும் விலங்குகளைத் தறித்துவிட்டு அவர்களோடு கூடப் புறப்பட்டு வாசலில் தூங்கிக்கிடந்த காவலர்களுடைய ஆயுதங்களை எடுத்துக்கொண்டு போய், வழியில் வந்து தகைந்த சில நகர சோதகர்களைக் கிட்ட நாடவொட்

டாமல் துரத்தி யடித்து மானபாலனுடைய வீட்டிற்குப் போனேன். அங்கே அவன் என் நடத்தையைக் கேட்டுச் சந்தோஷ மடைந்து தன் அபீஷ்டம் நிறைவேறினதாக நினைத்திருந்தான். மறுநாள் காலையில் மத்தகாலன், இராத்திரி விடுபட்டுக் கொண்டுபோய்ச் சரணமடைந்த சில கள்வர்களை விட்டுவிடும்படி கட்டளையிட்டு, தூதர்களை அனுப்பியதற்கு மானபாலன் தகுந்த விடைகொடாமல் வெருட்டியனுப்பவே, அவன் கோபங்கொண்டு உடனே போரிடவந்தான். அப்படியே இரண்டு சேனைகளும் போராடிக் கொண்டிருக்கையில் நான் சரேலென்று புறப்பட்டு, எதிர்த்தவர்களை அறுத்துக்கொண்டுபோய் மத்தகாலனுடைய தேரில் ஒரு குதியாய்க் குதித்துக் கையிலிருந்த கத்தியால் அவன் கழுத்தைத் தறித்தேன். அரசன் கொலையுண்டு கீழே விழவே மிகுந்த மற்ற சேனைகளெல்லாம் என்னையே சரணமடைந்தன. அவ்வளவு சேனைகளையும் கூட்டிக்கொண்டு ஜயசீலனான மானபாலன் தன் கூடாரத்திற்குப்போய் எனக்கு மிக்க மரியாதை செய்து பேரானந்த மடைந்தான்.

இச்செய்தி கேட்ட வீரகேது மகாராஜன் எதிர்கொண்டுவந்து என்னை மிகுந்த சிறப்போடு தன் பட்டணத்திற்கு இட்டுக்கொண்டுபோய் ஊர்வலஞ் செய்வித்து மகா வைபவத்துடனே அக்கன்னிகையை எனக்குக் கலியாணஞ் செய்வித்தான். பின்பு அந்தப் பட்டணத்திலேயே இளவரசுப் பட்டங் கட்டிக்கொண்டு சகல ராஜகாரியங்களையும் நானே பார்த்து வந்தேன். அவ்வளவு போகமாய் இருந்தும் உன்னைப் பிரிந்துபோன துக்கம் அறுபது நாழிகையும் என் மனதை உறுத்திக்கொண்டே யிருந்தது. இப்போது

ஒரு முனிவர்சொன்ன வாக்கியத்தைக்கேட்டு உன்னைக் காணும்படி இந்தத் தோட்டத்திற்கு வந்தேன்; அப்படியே தெய்வகடாக்ஷத்தால் உன்னைக் கண்டு களிக்கும்படி நேரிட்டது. இதைவிட எனக்குச் சந்தோஷம் வேறொன்றுமில்லை, என்று ஸோமதத்தன் சொல்ல, ராஜவாஹனன் அவன் பராக்கிரமப் பெருமையைக் கேட்டுச் சந்தோஷப்பட்டுத் தன் சரிதங்களையும் ஆதியோடந்தமாய் அவனுக்கு உரைத்தான்.

இவ்வாறு இவர்களிருவரும் குதூஹலமாயிருக்கையில் எதிரே புஷ்போத்பவன் வருவதைக்கண்டு ராஜவாஹனன் களிப்புற்று, "அப்பா, புஷ்போத்பவா! நீ இப்போது எங்கிருந்து வருகிறாய்? நான் போவது உங்களுக்குத் தெரிந்தால் நீங்கள் அதற்கு இடையூறு செய்வீர்களென்று நினைத்து, நீங்கள் யாவரும் தூங்கிக்கொண்டிருக்கையில் உங்களை மோசஞ்செய்து நான் போய்விட்டேனே! அப்புறம் நீங்கள் எவ்விதமானீர்கள்? நீ எங்கெங்கே சுற்றிவிட்டு வருகிறாய்?" என்று கேட்க, அந்தப் புஷ்போத்பவன் சந்தோஷத்தால் அவனைக் கட்டிக்கொண்டு தன் கதையைக் கூறலாயினான் :—

என்னுயிர்த்தோழனே! நாங்கள் அன்றையதினம் காலையில் எழுந்து பார்க்கையில் உன்னைக் காணாமையால் நீ அந்தப்பிராமணனுக்குத் துணைசெய்யப் போனாயென்று எங்களுக்குத் தெரிந்தது. ஆனால் நீ இன்னவிடத்திற்குப் போனாயென்று தெரியாமையால் உன்னைத் தேடும்படி புறப்பட்டோம். நானும் ஒரு மூலை தேடிக்கொண்டு வருகையில் ஒருநாள் நடுப்பகலில் வெயில் பொறுக்கமாட்டாமல் ஒரு மலையடி

வாரத்தில் ஒரு மரத்தின் நிழலில் உட்கார்ந்தேன். அங்கே என் பக்கத்தில் உருண்டையாய் ஒரு நிழ லாடிற்று. இதென்னவென்று அண்ணாந்து பார்க்கை யில் ஒருவர் ஆகாயத்திலிருந்து உருண்டு விழுந்து கொண்டிருந்தார். நான் அதைப் பார்த்து யாரோ என் னவோ, என்ன சங்கடத்தால் விழுகிறாரோவென்று இரக்கமுற்றுக் கீழே விழவொட்டாமல் கையிலேந்திக் கொண்டு உடம்பு நோவாமல் மெதுவாய்க் கீழேவிட் டேன். அவர் விழுந்த வேகத்தால் மூர்ச்சை போயி னார். நான் அவருக்குப் பலவிதமாய்ச் சீதோபசாரஞ் செய்ததனால் வெகுநேரங் கழித்துக் கொஞ்சம் பிரஞ்ஞைவந்து உடம்பு தெளிந்தபின்பு, அப்படி மலைமேலேறிக் கீழே விழுந்ததற்குக் காரணமென்ன வென்று நான் கேட்க, அதற்கு அவர், அப்பா! நான் மகததேசத்தரசனான ராஜஹம்ஸனுடைய மந்திரியா கிய பத்மோத்பவனுடைய கன்; எனக்கு ரத்னோத்பவ னென்று பெயர். நான் வர்த்தகத்தில் விருப்பங் கொண்டு காலயவனமென்கிற தீவிற்குப்போய் அங்கே ஒரு வர்த்தகன் பெண்ணை விவாஹஞ்செய்து அவ ளோடுகூடத் திரும்பி வருகையில் நடுக்கடலில் கப்பல் உடைந்து யாவரும் மூழ்கிப்போனார்கள். நான் மாத் திரம் மெல்ல மெல்லக் கரைவந்து சேர்ந்தேன். கரை ஏறியும், சரக்குகளையும் இழந்து மனையாளையும் பறி கொடுத்த துக்கத்தால், ஒன்றுந் தோன்றாமல் அல்லா டிக்கொண் டிருக்கையில், ஒரு முனிவர் வந்து இன்னும் பதினாறு வருஷத்தில் எனக்கு நல்லகாலம் வருமென்று சொன்னதனால் இதுவரையில் எதிர்பார்த்திருந்தேன். ஒரு நன்மையையும் காணேன்; எத்தனை நாளைக்கு இந்தத் துயரம் அனுபவிக்கிறதென்று இக்காரியஞ்

செய்யத் துணிந்தேனென்ருர். அவைகளைக் கேட்கவே அவர் என்னுடைய தந்தைதான் என்று தோன்றிற்று.

அத்தருணத்தில், 'பெண்ணே! வேண்டாம்; உன் புத்திரனும் புருஷனும் துரிதத்தில் வந்து சேருவார்கள் என்று ஜோதிஷசாஸ்திரி சொல்லியிருக்க, நீ இப்போது தீக்குளிக்கத் துணிந்தது சரியல்ல, வேண்டாம்' என்று ஒரு பெண்குரல் கேட்டது. அதுகேட்டு நான் 'ஐயனே உம்மோடு விண்ணப்பஞ் செய்யவேண்டியவை அநேகமிருக்கின்றன. அவையெல்லாம் அப்புறம் ஆகட்டும்; இதோ யாரோ ஒரு பெண்பிள்ளை கூவுகிருள்; அதை நாம் உபேக்ஷித்தால் அநர்த்தம் விளையுமென்று தோன்றுகிறது; நான் போய்வருமளவும் இங்கேயே இருக்கக் கோருகிறேன்' என்று சொல்லி என் தந்தையை அங்கேயே நிறுத்திவிட்டுப் போய்ப் பார்க்கையில், ஒருத்தி பெருந் தீவளர்த்து அதற்கு எதிரே கிழக்கு முகமாய்க் கைகூப்பி நின்றுகொண்டிருந்தாள். அவளையும் அவள் பக்கத்திலிருந்த குழவியையும் அழைத்துக்கொண்டு வந்து, என் பிதா முன் விட்டு, அம்மா நீங்கள் எங்கிருக்கிறவர்கள்? இங்கேன் வந்தீர்கள்? என்று கேட்டதற்கு, அந்தக் கிழவி, குழந்தாய்! இவள் காலயவன தீவிலிருக்கிற காலகுப்தனென்கிற வர்த்தகன் மகள் சுவிர்தை யென்கிறவள்; ரத்னோத்பவனைக் கலியாணஞ் செய்துகொண்டு பூர்ணகர்ப்பிணியாய்க் கப்பலேறி வருகையில் நடுவே கப்பல் முழுகிப்போகவே, நான் மெல்ல இவளை ஒரு கட்டைமேல் ஏற்றிக் கரைகொண்டு சேர்த்தேன். உடனே அங்கே ஒரு குழந்தையைப் பெற்ருள். என் துரதிர்ஷ்டத்தால் அந்தக் குழந்

தையை ஒரு காட்டானை தூக்கிக்கொண்டு போய் விட்டது. அதனால் சோகமடைந்து இவளும் நானு மாய் இக்காட்டிலேயே அல்லாடிக்கொண்டிருந்தோம்; இன்னும் பதினாறு வருஷம் கழித்தபின்பு, உன் குழந் தையும் கணவனும் வந்து சேருவார்கள் என்று ஒரு யோகி சொல்லக்கேட்டு இவள் இத்தனைநாள் பிரா ணனை வைத்துக்கொண்டிருந்தாள் ; அந்தக் கெடுவும் ஆய்விட்டது. இன்னும் ஒன்றையும் காணாமையால் அக்கினிப்பிரவேசம் பண்ணத் தீர்மானித்தாள் என் றாள். அதைக்கேட்டு அவள் என் தாய்தான் என்று நான் தெரிந்து அவளுக்குச் சாஷ்டாங்கமாய் வந்தனம் பண்ணி, என் கதைகளெல்லாம் அவளுக்குச் சொல்லி இவைகளைக்கேட்டு மனமகிழ்ந்து கொண்டிருந்த என் தந்தையையும் காட்டினேன் ; பின்பு அவர்கள் இரு வரும் ஒருவர்க்கொருவர் முன் அடையாளங்களால் நம்பிக்கை உண்டாக்கிக்கொண்டு பரமாநந்தமடைந்து ஆனந்தக் கண்ணீர்வழிய என்னைக் கட்டிக்கொண்டு உச்சி மோந்து ஒரு மாத்தினிழலில் உட்கார்ந்தார்கள். பின்பு என் தந்தையானவர் நம்முடைய ராஜஹம்ஸ சக்கரவர்த்தியின் யோக க்ஷேமங்கள் என்னவென்று கேட்டதற்கு நான் அவர் ராஜ்யமிழந்து போனதும், நாமெல்லாம் பிறந்து யாத்திரை புறப்பட்டது முத லான செய்திகளைச் சொல்லி அங்கே ஒரு முனிவர் ஆச்சிரமத்தில் அவர்களை நிறுத்திவிட்டு, உன்னைத் தேடவேண்டுமென்று அபிலாஷைகொண்டு, எந்தக் காரியமானாலும் பணமில்லாமல் முடியாதேயென்று அதற்காக அநேகம் சேஷர்களைச் சேர்த்து நமக்குத் தெரிந்த வித்தையால் விந்தியமலைக் காட்டில் வெகு நிதியிருப்பதைக் கண்டு அவைகளை வெட்டியெடுத்து

அதனருகே வந்திறங்கி இருந்த வர்த்தகாண்டை எருதுகளும் கோணிகளும் வாங்கி அவைகளில் அந்தப் பொருள்களை ஏற்றிக்கொண்டு அயலான் பொருளென்று சாக்கிட்டு மெல்லக் கூடாரம் கொண்டு சேர்த்து அங்கிருந்த சந்திரபாலனென்கிற வர்த்தகனை நேசித்துக்கொண்டு அவனுடன் என் தாய் தந்தையர்களும் நானுமாய் உஜ்ஜயினீ பட்டணம் போய்ச் சேர்ந்தோம் அங்கே சந்திரபாலன் தகப்பன் பந்துபாலனென்பவனுடைய சகாயத்தால் அத்தேசத்தரசனைக் கண்டு அவனுடைய தயையால் அப்பட்டணத்திலேயே நிலையூன்றியிருந்தேன். பின்பு ஒருநாள் உன்னைத் தேடவேண்டுமென்று புறப்படுகையில், எனக்குப் பிராண சிநேகிதனான பந்துபாலன் கண்டு, 'அப்பா! நீ ஏன் இப்போது அல்லாடுகிறாய்? எந்த மூலையென்று தேடுகிறது? நான் ஸமயம்பார்த்துச் சொல்லுகிறேன், அப்போ போகலாம்' என்றான். அப்படியே நான் நமக்கு நல்லகாலம் வருவதை எதிர்பார்த்துக்கொண் டிருக்கையில் அங்கே ஒரு வணிகன் வீட்டில் மிகவும் ரூபவதியான பாலசந்திரிகை என்கிற பெண்ணைக் கண்டு அவளைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்கிற அபிலாஷை எனக்கு உண்டாயிருக்க அவளுடைய இங்கிதங்களால் அவளுக்கும் என்மேல் ஆசையிருப்பதாய்த் தெரிந்தது. ஒருநாள் என் தோழனான பந்துபாலன் உன் வரவைப்பற்றிச் சகுனம் பார்ப்பதாக என்னையும் அழைத்துக்கொண்டு ஊருக்கு வெளியில் ஒரு தோட்டத்திற்குப் போய்ச் சகுனம் பார்த்துக்கொண்டிருக்கையில் நான் அந்தச் சிங்காரத்தோட்டத்தின் அழகைச் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தேன். அங்கே ஒரு குளக்கரையில் என்

மேல் ஆசைகொண்ட பாலசந்திரிகை மனங் கலங்கி முகம் வாடி நின்றுகொண் டிருந்தாள். அது கண்டு நான் அவளண்டை போய், பெண்ணே! நீ என் விசனப்படுகிறுயென்று கேட்டதற்கு, அவள் மூன்ரும் பேர் ஒருவரும் இல்லாமையால் வெட்கத்தை விட்டுச் சொன்னதாவது: இந்த மாளவதேசத் தாசஞன மான ஸாரன் தனக்குக் கிழத்தனம் வந்ததஞல் தர்ப்பஸார னென்கிற தன் குமாரனுக்குப் பட்டங்கட்டுவித்தான். அந்த தர்ப்பஸாரன் ஏக சக்கிராதிபதியாய்த் தானே பூமி முழுவதும் ஆளவேண்டுமென்று கருதி, தன் அத்தையின் மக்களான சண்டவர்மா, தாருவர்மா என்கிற இருவரையும் ராஜகாரியங்களைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு இமயமலையில் தவஞ் செய்யப்போயிஞன். சண்டவர்மா ராஜ்யத்தைக் காத்து வருகிறுன்; அவன் தம்பியான தாருவர்மா அடங்காப் பிடாரியாய் அயலார் பெண்டுகளைப் பிடிப் பதே தொழிலாய்த் திரிகிறுன். உன்னிடத்திலேயே மனம் புதைத்திருக்கிற என்னை அவன் பிடித்திழுக்க வந்தான்; அதஞலேதான் நான் துயரப்படுகிறேன் என்று கண்ணுங் கண்ணீருமாய்க் கதறக்கேட்டு நான் அவளைச் சமாதானம்பண்ணி, அவனைக் கொல்லும்படி எளிதாய் ஒருவழி கண்டுபிடித்து அவளுக்குச் சொன் னேன். பெண்ணே! அவனை விநோதமாய் வெல்ல வழி யொன்றுண்டு. அதென்னவெனில், பாலசந்திரிகை யைத் துஷ்ட தேவதையொன்று பிடித்திருக்கிறது; ஏகாந்தத்தில் அவள் தன் தோழியுடன் வந்திருக்கும் போதுளவன் அந்தத் தேவதையைக்கொன்று அவளைச் சந்தோஷப்படுத்துகிறுஞே அவன்தான் அவளை விவா கஞ் செய்துகொள்ள வேண்டுமென்று ஒரு முனிவர்

சொன்னதாய்ப் பட்டணமெங்கும் பிரசித்தப் படுத்தி விடவேண்டும். இந்தக் கூச்சலைக்கேட்டு அந்தத் தாருவர்மா பயந்து சும்மாவிருந்துவிட்டவால் உன் இஷ்டம் கைகூடிப் போகிறது; அப்படியன்றி அதற்கும் துணிந்து வருவானாயின் அப்போது, உன் தகப்பன் முதலியவர்கள், அப்பா! நீ இந்தக் கொடிய காரியம் எங்கள் வீட்டிற் செய்வது நலமன்று; பட்டணத்து ஜனங்களெல்லாம் பார்த்திருக்கத் தோழியுடன் இந்தப் பாலசந்திரிகையை உன் அரண்மனைக்கு அழைத்துக்கொண்டுபோய்ப் பிழைத்து வருவாயாகில் சுகமாய் அவளைக் கலியாணஞ் செய்துகொள்ளலாம் என்று சொல்லவேண்டும். அதற்கும் அவன் உடன்பட்டால், நான் உனக்குத் தோழியாய் வேஷம் போட்டுக்கொண்டு வந்து அவனைக் குத்திப் பிராணனை வாங்கிவிட்டு அப்படியே உன்னோடுகூடத் திரும்பி வந்துவிடுகிறேன். முதலில் நீ இப்போது வீட்டுக்குப் போனதும் உன் தாய் தந்தையர்களுடன் நம்மிருவருக்குமிருக்கிற மனோபாவத்தை அறிவித்து உன்னை எனக்கே கலியாணம் பண்ணிக்கொடுக்கும்படிகேள்; அதை அவர்கள் அங்கீகரிக்க யாதொரு ஆக்ஷேபமுமில்லை. பின்பு தாருவர்மாவைக் கொல்லுவதற்கு நான் சொன்ன உபாயத்தைச் சரியாய் நடத்த வேண்டுமென்று சொல்லவே, அவள் அப்படியே ஆகட்டுமென்று சந்தோஷமாய் வீட்டுக்குச் சென்றாள். அத்தோட்டத்தில் சில மரங்கள் தளிர்த்துத் தழைத்துப் பந்தல் அலங்கரித்தாற்போல் விளங்குவதையும், சில விருக்ஷங்கள் கொத்துக் கொத்தாய்ப் பூத்து மணக்கோலம் பூண்ட மணமகள் போலிருக்க அவற்றினருகே சிலகொடிகள் தளிர்த்தும் பூத்தும் தழைத்தும் அவை

களின் கிளைகளைத் தழுவி நின்று சிறந்த ஆடையா பரண முதலியவை அணிந்த கலியாணப் பெண்கள் போல் தோற்றுவதையும், அங்கே குயில்கள் கூவுவதினாலும் மயில்கள் ஆடுவதினாலும் வண்டுகள் ரீங்காரஞ் செய்வதினாலும் சங்கீதமும் நர்த்தனமும் அமைந்தது போல் இருப்பதையும், சில தருக்கள் இலைகளினிடையே காய் கனிகளை ஏந்திப் பலதானஞ் செய்ய நின்ற அந்தக் கிருகபதிகள் போல் பொலி வுற்றிருப்பதையும், பல பறவைகள் அங்குப் பறந்தோடி வருவது அந்தத் தானத்தைக் கைக்கொள்ள வரும் யாசகர் போலிருப்பதையும், கற்றுணர்ந்தோர் கருத்துப்போல் தெளிந்தும் குளிர்ந்துமிராநின்ற தடாகங்களில் தாமரைகள் மலர்ந்து அசைந்துகொண்டிருப்பதனால் மலர்ந்த முகத்தை அசைத்து அக்கலியாண அமைப்பைச் சிலாகிப்பதுபோல் தோன்றுவதையும், நீர்ப்பறவைகள் கூடிக் கத்திக்கொண்டிருப்பதும், அக்கலியாண விநோதத்தைக் குறித்துப் பேசிக்கொண்டிருப்பதென நிற்பதையும், மற்றும் பலவகை மனோகரமான காட்சிகளையும் சுற்றிப் பார்த்துவிட்டு நானும் பந்துபாலனண்டை வந்தேன். அவன், இன்னும் முப்பது நாளில் உன்னுடைய சேர்க்கை எனக்கு நேருமென்றான். அதைக் கேட்டுக் களிப்படைந்து நாங்களிருவரும் வீடு வந்து சேர்ந்தோம். உடனே பாலசந்திரிகை, பறவை போல் தன் வலையில் சிக்கிக்கொண்ட தாருவர்மாவினுடைய வீட்டுக்குப் போகிறதாய், செய்தி சொல்லி அனுப்பினாள். அப்போது நானும் பெண்களுக்கு உரிய அலங்காரங்களெல்லாம் செய்துகொண்டு பாலசந்திரிகையுடன் அரண்மனைவாயிலிற் போய் நின்று நாங்கள் வந்திருப்பதைத் தாருவர்

மாவுக்கு வாயிலோனைக்கொண்டு தெரிவிக்க, அந்தத் துஷ்டனும் அதிவேகமாய் எதிர்கொண்டு வந்து, அந்த விநோதக்காட்சியைக் காணவந்தவர்களை யெல்லாம் அங்கேயே நிறுத்திவிட்டு, எங்களிருவரை மாத்திரம் உள்ளே அழைத்துக் கொண்டு போயினான். இன்றையதினம் தாருவர்மா ஒரு யக்ஷ தேவதையைக் கொல்லப் போகிறானென்று கேள்விப்பட்டுத் தெருவில் எள்ளிட இடமில்லாமல் கூட்டம் கூடிப் போயிற்று. விவேகமே யில்லாத தாருவர்மாவானவன் எங்களிருவரையும் தன் படுக்கையறைக்கு இட்டுக் கொண்டு போய் ஹம்ஸதூளிகாமஞ்சத்தில் உட்காருவித்து, அவ்விடம் கொஞ்ச மிருண்டிருந்ததனால் என்னையும் பெண்ணாகவே பாவித்து, எங்களிருவருக்கும் விசித்திரமான ஆடையாபரணங்களும் பலவகை வாஸனைத் திரவியங்களும் கொடுத்து, கொஞ்ச நேரம் கொஞ்சிக்குலாவி கடைசியில் மதிகெட்ட வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு கிட்டே வந்தான். அது கண்டு நான் கோபித்து அவனைக் கீழேதள்ளி கையாலும் காலாலும் நசுக்கிக் கொன்று படுக்கைமேல் எடுத்துவிட்டுக் கலைந்திருந்த அலங்காரங்களை யெல்லாம் சீர்ப்படுத்தி நடுவீட்டில் வந்து, ஓகோ! பாலசந்திரிகையைப் பிடித்திருக்கிற தேவதை, சிவந்து திரண்டு பிதுங்கிய கண்ணும், தொங்கும் புருவங்களும், சப்பையாய் விரிந்த மூக்கும், இடையிட்டிருக்கிற பலகறைபோன்ற பற்களும், விரிந்த வாயும், அக்கினிச் சுவாலை போன்று நீண்டசைகிற நாக்கும், கூர்ச்சம் போல் நெறித்த செம்பட்டை மயிரும், பருத்த தலையும், பனந்துண்டுகள்போன்ற கை கால்களும், முறம்போல் விரிந்து வாள்போற் கூர்மையாய் நீண்

டிருக்கிற நகங்கள் எண்ணெயூட்டிய கருங்கல்லை யொத்து பருத்துயர்ந்த உடலுமாய், இதோ கோர வடிவெடுத்து வந்து தாருவர்மாவைக் கொல்லுகிறது ; வந்து பாருங்கள் என்று நான் பெருங் கூச்சலிட்டுக் கதறவே, வாசலில் கூட்டங் கூடியிருந்தவர்களெல்லாம், சிலர் கோவென்று அழுதுகொண்டும், சிலர் ஆ! ஆ! என்று அதட்டிக்கொண்டும் சிலர் பாலசந்திரிகையைப் பலமான தேவதை பிடித்திருக்கிறதென்று தெரிந்தும் புத்திகெட்டு இப்படிப்பட்ட வேலை செய்தானே, அதன் பலனை இப்போது அனுபவிக்கிறான் ; அதற்கு யாரென்ன செய்யலாம் என்று தேறுதல் சொல்லிக் கொண்டும் வந்து கூடினார்கள். யாவரும் அப்படி அல்லோல கல்லோலமாயிருக்கையில் நாங்களிருவரும் மெதுவாய் நழுவி வீட்டுக்கு வந்துவிட்டோம். பின்பு சிலநாள் கழித்து அப்படியே நான் பட்டணத்து ஜனங்களெல்லாம் பார்த்திருக்க அவளை மணம் புரிந்து கொண்டேன். இன்றையதினம் நீ வருவாய் என்று முன்னமே பந்துபாலன் சொல்லியிருந்த படியால் இங்கேவந்து உன்னைப் பார்த்துப் பேரானந்த மடைந் தேனென்றான்.

இப்படி புஷ்போத்பவன் சொன்ன சரித்திரத் தைக்கேட்டு ராஜவாஹனன் அவனைப் புகழ்ந்து தன் கதையையும் ஸோமதத்தன் கதையையும் அவனுக்குச் சொல்லி, அவன் வந்த காரியத்தை நிறைவேற்றிக் கொண்டு வரும்படி ஸோமதத்தனை விட்டு, புஷ்போத் பவனோடு புறப்பட்டு அவந்திப்பட்டணம் வந்துசேர்ந் தான். அங்கே புஷ்போத்பவன், தங்களுடைய ராஜ குமாரன் வருகிறானென்று அந்த நகரமெங்கும் பிரசித் தப்படுத்தி, அநேகவித ஸம்மானங்கள் செய்வித்து

அந்த ராஜகுமாரனைத் தன் வீட்டிலேயே வைத்துக் கொண்டிருந்தான்.

அப்படியிருக்கையில் அந்த ராஜகுமாரனுக்கு அப் பட்டணத்து அரசன் மகளைக் கலியாணஞ் செய்து கொள்ளக் கருத்துண்டாயிற்று. அப்போது வஸந்த காலமும் நேர்ந்தது. அக்காலத்தில் மல்லிகை, முல்லை, ஜாதி முதலிய பூங்கொடிகளெல்லாம் பூத்துப் பரிமளம் வீசவும், ஏரி குளம், குட்டை முதலானவைகளில் அல்லி, ஆம்பல், தாமரை செங்கழுநீர் முதலான நீர்ப் பூக்கள் பூத்து விளங்கவும், வண்டுகள் மதுவுண்டு களித்து மனோஹரமாய் ரீங்காரஞ் செய்யவும், குயில் கள் இளந்தளிர்களைக் கறித்துக் கொழுத்துப் பஞ்சம ராகம் பாடவும், ஜனங்களெல்லாம் குசும்பா தோய்த்த வஸ்திரந் தரித்துப் பீச்சாங்குழல்களால் ஒருவர்மே லொருவர் மஞ்சள் நீர் பொழிந்துகொண்டு மத்தளம் தாளம் புல்லாங்குழல் முதலிய வாத்தியங்களோடு பல விநோதப் பாட்டைப் பாடிக்கொண்டு பண்டிகை கொண்டாடவும், பூமியெங்கும் மஹோத்ஸவமாயிருந் தது. அவ்விளவேனிற் காலத்தில், மலய மலைச்சார லிலுள்ள சந்தன விருக்ஷங்களின் வாசனைப் பொடிகளை நிரம்பப் பூசிக்கொண்டு வழிநடுவே அநேக உத்தியான வனங்களிற் புகுந்து அங்கங்குள்ள மகரந்தங்களையும் நீர்த் திவலைகளையும் வாரிக் குடித்துப் பருத்து உடற் சுமை தாங்க மாட்டாததுபோல் மெல்ல மெல்லத் தென்றலும் வீசத்தலைப்பட்டது.

அந்த லோகோத்ஸவமான வஸந்தகாலத்தில் அப் பட்டணத்து ராஜகுமாரியாகிய அவந்திசுந்தரி யென் பவள் தளிர்த்துப் பூத்ததோர் பொற்கொடியென்ன

ரத்தினுபாண முதலியவை அணிந்து, பாலசந்திரிகை யென்னும் பேர்க்கொத்த வடிவுள்ள தன் உயிர்த் தோழியோடு அநேகம் பெண்களைக் கூட்டிக்கொண்டு சிங்காரத் தோட்டத்திற்குப் போய்க் காய்த்துத் தழைத்த ஒரு மாமரத்தினடியில் பந்தடித்தலும் கழலம்மானைகளாடுவதுமாய் விலாசத்தோடு விளையாடிக் கொண்டிருந்தாள். அப்போது ராஜஹம்ஸன், அக் குமரியைக் காணக்கருதித் தன் நேசனை புஷ்போத் பவனேடுகூடி உல்லாசமாய் அத் தோட்டத்திற்கு வந்து, தென்றற் காற்றினுல் அசைந்து ஆடிக்கொண்டு அழகாய்த் தளிர்களும் பூக்களும் கொத்துக் கொத் தாய்த் தொங்குவதையும், தாமரைத் தடாகங்களில் அன்ன முதலிய நீர்ப் பறவைகள் கோலாஹலமாய்ச் சிறகடித்து விளையாடுவதையும், இன்னும் இச்சாய லான அநேக வேடிக்கைகளையுங்கண்டு கண்குளிர்ந்து, பலவகைப் பக்ஷிகள் காதுக்கினிப்பாய் இசைபாடக் கேட்டு மனங்களித்து மெல்ல மெல்ல நடந்துபோய் அப்பெண்கள் கரைகடந்து விளையாடிக்கொண்டிருப் பதையும் கண்ணுற்ருன். அக்கன்னிகளுடன் ஆடிக் கொண்டிருந்த பாலசந்திரிகை யானவள் இந்த ரூப வானைக்கண்டு, இங்கே வருவதற்கு யாதொரு தடையு மில்லை யென்று கண்குறி காட்ட, அவனும் மெல்ல மெல்ல அச்சுந்தரிகள் வசிக்குமிடம் போய்ச் சேர்ந்து அக்கூட்டத்தினடுவில், முத்துமாலை நடுவில் மாணிக்கப் பதக்கம்போல் விளங்கா நின்ற அவந்தி சுந்தரியை நோக்கி, அவள் வடிவழகை வியந்து அவள் மேல் காதல்கொண்டான். அச்சிறுமியும் அந்த ராஜகுமார னைக் கண்டு, இம்மகனைப் பெற்ற பாக்கியவான்கள் எவரோ? இவன் மணமகள் எவளோ? இவன் இங்கு

வந்ததற்கு நிமித்தம் யாதோ ? இவனைக் காணவே என் மனம் நிலையில் நில்லாமல் அலைபாய்கின்றதே ! இவன் யாரோ? எங்கிருப்பவனோ? இவன் வரலாற்றை எப்படி விசாரித்தறியலாம் என்றிப்படிச் சிந்தித்த வண்ணமாய்க் கிஞ்சித்து வெட்கத்தால் தோழி மறைவில் நின்றுகொண்டு அவனிடத்திலேயே கண்ணுயிருந்தாள். அங்கிருந்த பாலசந்திரிகை, இவ்விருவர்களுடைய உள்ளக் கருத்தையும் குறிப்புகளால் கண்டுணர்ந்து, இக்கூட்டத்தினடுவே நாம் ஒன்றையும் வெளிப்படையாய்த் தெரிவிக்கலாகாதென்ற உலக வழக்குக்கேற்ப, பெண்ணரசே ! நீ அதிதியாய் வந்த இந்த ராஜகுமாரனை உபசரிக்கக்கடவை ; இவர் எல்லாக் கலைகளும் கரைகண்டவர், தேவதாப் பிரசாதமுள்ளவர், யுத்தவீரர், மணிமந்திர ஒஷதி என்கிற எல்லா விசேஷங்களையும் நுட்பமாய்த் தெரிந்து தேறினவர், இவரை நாம் உபேக்ஷிப்பது தகுதியல்லவென்றாள். அதைக் கேட்டு அவந்தி சுந்தரியானவள், தன் எண்ணத்துக்கு அவள் பேச்சு ஒத்திருப்பதைப்பற்றி மிகவுங் களிப்புற்று, அந்த ராஜகுமாரனை ஆஸனத்தில் வீற்றிருக்கச் செய்து சகிகள் கொணர்ந்த உபஹாரங்களைக்கொண்டு அவனை விசேஷமாய் பூசித்தாள்.

அத்தருணத்தில் ராஜவாஹனன் மனதில் ஒரு தோற்ற முண்டாயிற்று. இப்பெண்ணினிடத்தில் நமக்கு இவ்வளவு அநுராக முண்டாவதற்கு ஹேதுவென்ன? இவள் முற்பிறப்பில் நம்மில்லாளான யஞ்ஞவதிபோலவே காண்கிறாள். அப்படியாயின், சாப முடிவு பெறுங்காலத்தில், முன்னினைவு இருவர்க்கும் ஒரே ரீதியாய் உண்டாகு மென்று அம்முனிவர்

உரைத்தபடி, இக்கன்னிகைக்கும் முன்னினைவு உண்டாகவேண்டுமே; ஆதலின், இவ்வடையாளங்களைக் குறிப்பாய்க் காட்டுவோமென்று அவன் யோசிக்கையில், அழகான ராஜஹம்ஸமொன்று விளையாட்டாய் அவளண்டை ஓடி வந்தது. அது கண்டு அரசன் மகள் அதைப் பிடித்துத் தரும்படி பாலசந்திரிகையை வேண்ட ராஜவாஹனன், இதுதான் நம் கருத்தை வெளியிடத்தக்க தருணமென்று, பாலசந்திரிகையை நோக்கி, தோழி! முற்காலத்துக் கதையொன்று சொல்லுகிறேன் கேள். சாம்பனென்னும் ஒரு ராஜன் தன் மனையாளோடுகூட ஒரு தாமரைத் தடாகத்துக்குப் போய் ஜலக்கிரீடை செய்கையில் அங்கே ஒரு கமலத்தினடுவே நித்திரை செய்துகொண் டிருந்த ஓரன்னப் பறவையைப் பிடித்துத் தாமரை நூலினால் காலிரண்டையும் கட்டி மந்தஹாஸத்துடன் தன் நாயகியை நோக்கி, இதோ இந்த ஹம்ஸமானது என்னால் கட்டுண்டு முனிவர்போல அமைதியா யுட்கார்ந் திருக்கிறது; இதை உன்னிஷ்டப்படி பிடித்துக் கொண்டு போகலாமென்றான். அப்போது அந்த ராஜஹம்ஸ வேஷம்பூண்ட தபோதனர் அவனைப் பார்த்து, ஓ பூபாலகனே! இந்தத் தாமரை மேல் ஏகாந்தமா யுட்கார்ந்து யோகநிஷ்டையி லிருந்த என்னை அகாரணமாய் ராஜ்ய கர்வத்தால் அவமானப் படுத்தினை யாதலின் நீ மனையாளைப் பிரிந்து பரதவிக்கக்கடவாயென்று சபித்தனர். அது கேட்ட சாம்பன், முகம் வாடி அந்தத் துக்கம் ஆற்றமாட்டாமல், அம்முனிவர் கால்களில் வீழ்ந்து கைகூப்பிக்கொண்டு விவேகமற்றுச் செய்த இப்பிழையைப் பொறுக்க வேண்டும் சுவாமி, என்று வேண்ட அம்முனிவரும்

கருணைகூர்ந்து, மகா ராஜனே! 'அடாதது செய்யின் படாததுபடுவர்' எனக் கேட்டில்லையோ; ஆயினும் இப்பொழுது நாம் உன் கொடுஞ்செயலைப் பொறுத்தோம்; இச்சாபம் உனக்கு இப்பிறப்பில் உண்டாகக் கடவதன்று. என் வாக்கு வீண்போகாதாகையால், ஒரு நொடிப்பொழுது நீ என் கால்களைத் தளைசெய்த நிமித்தம், மறு பிறப்பிலும் உனக்கு இல்லாளாகப்போகிற இவளுடன் சுகமனுபவிக்குங் காலையில், காலும் விலங்குமாய் இரண்டு மாதகாலம் மனையாளைவிட்டுத் தவிக்கவேண்டும் என்று சொல்லி முற்பிறப்பின் நினைப்பும் அவர்களுக்கு உண்டாகும்படி அனுக்கிரகித்தார். ஆதலால் நீ இப்போது அன்னத்தைக் கட்டவேண்டா மென்றான். அதைக் கேட்கவே அவ்வரசன் மகள், இவர் நம் பிராண நாதனே யென்று நிர்ணயித்து மனம் பொங்கி முக மலர்ந்து புன்னகைகொண்டு ராஜகுமாரனை நோக்கிட, ஓ, மகா ராஜனே! முன் சாம்பன் யஞ்ஞவ்தியின் கருத்தைப் பூரிக்கும்படி ஸாஹஸமான காரியத்தை நடத்தினனன்றோ! அப்படியே உலகத்தில் கற்றுணர்ந்தோர்களும் ஒருவரிடத்தில் அபிமானத்தால் செய்யத் தகாதவைகளையும் செய்யத் துணிவார்கள் என்று தனக்கும் பூர்வ ஸ்மரணம் வந்ததாய் அறிவித்தாள். இப்படி அவர்களிருவரும் இன்னும் பல அடையாளங்களைக் குறிப்பாய்ப் பேசிக்கொண்டு மிக்க நம்பிக்கையுற்றவர்களாய் உள்ளங் களித்துநின்றனர்.

அத்தருணத்தில் அப்பட்டணத்தரசி பரிஜனங்களுடன் தன் மகளுடைய விளையாட்டைக்கண்டு உகக்க அத்தோட்டத்து வாயிலண்டை வருவது கண்டு, பால சந்திரிகையானவள் இந்த ரகசியம் வெளிக்கு வரப்

போகிறதே யென்று பரபரப்புடன் ராஜவாஹனனைப் புஷ்போத்பவனோடுகூட மாத்து மறைவில் ஒளித்திருக்கும்படி கண்குறி காட்டினள். அவ்விருவரும் அவ்வாறே ஒதுங்கி நின்றனர். உடனே ராஜமஹிஷி அவ்விடம் வந்து சற்றளவு அங்கு நடக்கும் வேடிக்கைகளைப் பார்த்துவிட்டு மகளை இட்டுக்கொண்டு அரண்மனை போகப் புறப்பட்டாள். தாயைத் தொடர்ந்து போகிற அவந்தி சுந்திரியானவள், ஓ ராஜஹம்ஸகுல திலகமே! என்னுடன் கூடி விளையாடவேண்டுமென்று தானய்வந்த உன்னை மதியாமல் நான் போய்விடுவது அநியாயந்தான். இதனால் உன் மனம் சிறிதும் வேறுபடக்கூடாது என்று அன்னத்திற்குச் சொல்லும் பாவனையாய் ராஜகுமாரனை வேண்டிக்கொண்டு திரும்பித் திரும்பி அவனுடைய முக கமலத்திலேயே கண்ணுற்றவளாய்த் தன் அந்தப்புரம் போய்ச் சேர்ந்தாள்.

அன்றுமுதல் அவள் ஏக்கம் பிடித்தவளாய் உடம்பு மெலிந்தும் நிறம் குறைந்தும் வருந்திக்கொண்டிருக்க, அத்தோழிமார் யாதோ இவளுக்கு நோயுண்டாயிருக்கிறதென்று அதற்கேற்பச் சில உபசாரஞ் செய்துவந்தனர். அவளுக்கோ அவை ஒன்றும் பயன்படாமற் போய்க் கொண்டிருந்தன. ஒருநாள் அந்த ராஜபுத்திரி தோழிகளை நோக்கி, ஓ, பாங்கிமாரே! நீங்கள் வியாதியறியாமல் சிகிச்சை செய்கிறீர்கள். இந்த நோயை நீக்க உங்களால் முடியுமோ! அதற்கு அந்த ராஜகுமாரனல்லவோ மருந்து செய்யவல்லவன்; அவன் நமக்குக் கைக்கெட்டாத பொருள் என்றாள். அது கேட்டுப் பாலசந்திரிகை, இன்னும் சிறிதுகாலம் நாம் உபேக்ஷயா யிருந்தால், இவள் காதினால் கேட்

டறியும்படியான நிலைக்கு வந்து விடுவாளென்று தோன்றுகிறது. ஆதலால் உடனே இதைத் தீர்க்க முயலவேண்டுமென்று அந்தக் கன்னிகைக்குச் செய்ய வேண்டிய உபசரணைகளுக்காகச் சிலரை நியமித்து விட்டுத் தான் ராஜகுமாரனண்டை போனாள். அவனும் கும்பிடப்போன தெய்வம் குறுக்கேவந்தது என்பது போல் அவளைக் கண்டு சந்தோஷமடைந்து, என் னுயிர்த் தோழி! நீ வந்த செய்தி என்னவென்று வினவ, அவள், ஸ்வாமி அன்று சிங்காரத்தோட்டத் தில் தங்களைக் கண்டதுமுதல் எங்கள் ராஜபுத்திரி ஏக்கமுற்றுச் சோர்ந்திருக்கிறாள். தன் கருத்து வெளிப் படத் தங்களுக்குப் பத்திரிகையும் ஒன்று எழுதி யனுப்பியிருக்கிறாள் பாருங்கள் என்று அதை அவன் கையிற் கொடுக்க, அவன் அதைப் பிரித்துப் படித் தான். அதில்,

> "மலரினு மொளிர் தரு மகிபனின் னுருவமென்
> புலனோ ராறையும் போதக் கவர்ந்தன
> அடியா ளிடத்துநீ அருள்செயல் வேண்டுமே"

என்று எழுதியிருந்தது. அதைப் பார்த்து ராஜவா ஹனன் மனங்களித்துப் பாலசந்திரிகா! என் உட் கருத்தை உணர்ந்த நீயும் என்னையே கொடியனுய்க் கூறுகின்றையே, யாவும் உனக்கே தெரியலாம். இக் காரியத்தை நீயே தலைக்கட்டவேண்டும்; நல்லதோர் உபாயம் தேடிக்கொண்டு இன்னும் இரண்டு மூன்று தினத்தில் நான் அவ்விடம் வந்துசேருகிறேன் என்று சொல்லி யனுப்பினன். அவளும் சந்தோஷமாய் அந்தப்புரம் போய்ச்சேர்ந்தாள்.

மறுநாள் ராஜவாஹனன் உத்தியான வனத் திற்குப்போய் உலாவி வருமோமென்று புஷ்போத்பவ

ஞேடுகூட அப்பட்டணத்துச் சிங்காரத் தோட்டத்திற்குச் சென்று பலவகைப் புதுமைகளைப் பார்த்துக் கொண்டிருக்கையில், வேதகோஷமொன்று கேட்டது. அதென்னவென்று அங்கே சென்று பார்க்க, ஓர் அந்தணன் நீராடி ஜபமுதலிய நியமங்களை முடித்து நெற்றி முதலிய விடங்களில் புண்டரந்தரித்து வேத மோதிக்கொண் டிருந்தான். பின்பு அவன் பலவகைப் பட்டாடைகளும் மகரகுண்டலங்களு மணிந்து புத்தகம், மடிசஞ்சி முதலான உபகாரணங்களை எடுத்து கொண்டு, வருகிற சிஷஞெருவனேடு அங்குவந்து உத்தம புருஷலக்ஷணங்க ளெல்லாம் ஒன்றியிருக்கின்ற ராஜவாஹனனைக் கண்டு ஆசீர்வதித்தான். அவனைக் கண்டு ராஜகுமாரன், "நீர் யார்? எவ்வூரிலிருப்பவர்? எங்கிருந்து என்ன காரியத்துக்காக இங்கே வந்தீர்? எந்தக்கலையில் மேன்மைப்பட்டிருக்கிறீர்?" என்று வினவியதற்கு, அவன் "எனக்கு வித்தியேசுவான் என்று பெயர், நான் காசியிலிருப்பவன்; இந்திரஜால வித்தையைக் கரைகண்டவன்; என்னுடைய திறமையைக் காட்டிப் பல அரசர்களிடம் வெகுமதி பெற்றுக் கொண்டு இப்போதுதான் நான் இந்த உஜ்ஜயினீ பட்டணத்திற்கு வந்தேன். அது நிற்க; இப்போது உனது உடல் வெளுத்துப்போனதற்குக் காரணம் ஒன்றையும் காணேன் என்று புன்னகையுடன் விநோதமாய்க் கேட்டான். அதுகேட்டுப் புஷ்போத்பவன் தன் தோழன் காரியம் இவனுலேதான் நிறைவேற வேண்டுமென்று கருதி லோகாபிராமமாய்ச் சற்று நேரம் பேசி அவனை நேசப்படுத்திக்கொண்டு, நீங்கள் இப்போது எங்களுக்கு நேசராய்ப்போனீர்கள்—நேசர்களுடன் சொல்லக்கூடாத செய்தியும் உலகிலுண்

டோ? இந்த ராஜகுமாரனும் மாளவராஜன் மகளும் சந்திக்க நேர்ந்து இருவரும் ஒருவர் மேலொருவர் ஆசைகொண்டார்கள். அதற்கு இக்காலத்தில் இவ் விடத்து ராஜகாரியம் பார்த்துவருகிறவர் விரோதியா யிருக்கிறார். ஆதலால் அக்கருத்தை நிறைவேற்ற உபாய்மொன்றும் அகப்படாமல் இவர் வருந்து கிறாரென்றான். அவ் விந்திரஜாலிகள், அதைக்கேட்டு வெட்கித் தலைகுனிந்து நின்ற ராஜகுமாரனைப்பார்த்து, உமதிஷ்டப்படி நடத்த நான் காத்திருக்க உமக்கு இவ் வருத்தமேன்? நான் இந்திரஜால வித்தையால் இப் பட்டணத்தரசனை மோகிப்பித்துப் பட்டணத்தோ ரனைவரும் பார்த்திருக்க அக்கன்னிகையை உமக்கு மணம்புரிவித்து அந்தப்புரங் கொண்டுசேர்ப்பேன். இச்செய்தியை மாத்திரம் முன்னமே அப்பெண் ணுக்கு அறிவிக்கவேண்டும் என்றான். ராஜவாஹன னும் இலவசமாய்த் தனக்கு நேர்ந்த நட்பிற்கு வியந்து தகுந்த மரியாதையுடன் அவனை அனுப்பிவிட்டுத் தானும் தன் மித்திரனுடன் இல்லம் வந்துசேர்ந்தான்.

மறுநாள் இந்திரஜாலியான வித்தியேசுவரன் அர மனைவாயிலில்வந்து தன்வரவை அரசருக்கு அறிவித்து அவனுடைய அனுமதியால் கொலு மண்டபத்திற் சென்று தன் திறமையைக் காட்ட ஆரம்பித்தான். அவ்விநோதத்தைக் காண ஜனங்கள் கூட்டங்கூடிப் போயினர். அரசனும் வெண்குடை, வெண்சாமரை, ஆலவட்டம், கொடிகள், மகர தோரணங்கள், வெள் ளித்தடிகள், பேரி, சங்கு, காளம், சின்னம் முதலான தன் ஆடம்பரங்களோடும், மந்திரி பிரதானி முதலான வர்களோடும் வந்துசேர்ந்தான். அப்போது பலவித மான வாத்தியங்கள் முழங்க, வித்தியேசுவரன் மயிற்

ரேகையைச் சுழற்றிக்கொண்டு கொஞ்சநேரம் கண்ணைத்திறவாமல் வானத்தை நோக்கி மொணமொணவென்று மந்திரம் உச்சரித்துக்கொண் டிருந்தான். உடனே அநேக சர்ப்பங்கள் முடிகளில் மாணிக்கங்கள் மின்ன கோரமாய் விஷயங்களைக் கக்கிக்கொண்டும் நாக்குகளை நீட்டியசைத்துச் சீறிக்கொண்டும் யாவரும் பயப்படும்படி அம்மண்டப முழுதும் வியாபித்தன. உடனே கழுகுகள் பல தோன்றி அவைகளைக் கொத்திக்கொண்டு வானமெங்கும் படர்ந்தன. பிறகு அவன், முன் நரசிங்கமூர்த்தி இரணியகசிபுவை மார்பு கிழித்துக் கொன்ற அற்புதத்தைப் பிரத்யக்ஷமாகும்படி காட்டி, சபாநாயகனை நோக்கி, "மகாராஜனே; எதுவானாலும் சுபமாயே முடியவேண்டும். ஆதலால் இப்போது தங்கள் குமாரத்தி எந்த விஷயத்திலும் தனக்கு ஒரு படி உயர்ந்திருக்கிற ராஜகுமாரனை மணமாலை சூட்டுவதாய்க் காட்ட உத்தரவானால் அப்படியே காட்டுகிறேன் பாருங்கள்" என, அரசன் அதைக் காண விரும்பி அனுமதி கொடுக்கவே, யாவர் கண்களிலும் அஞ்சனம்போட்டு முன் சங்கேதப்படி சித்தமாயிருந்த அவ்விருவரையும் அழைப்பித்து அக்கினி ஸாக்ஷியாய் விவாஹத்தை நிறைவேற்றிக் கடைசியில் அந்த இந்திரஜாலக்காரன், இங்கே வந்தாடுகிற மாயா புருஷர் அனைவரும் தத்தமிடம்போய்ச் சேரலாமென்று மயிற்ரேகையைச் சுழற்றவே மற்றப் பொய்த் தோற்றங்கள்போல அந்த ராஜவாஹனனும் தன் மனையாளோடுகூட அந்தப்புரம் போய்ச்சேர்ந்தான்.

அதுகண்டு மாளவராஜன் அதிசயித்து அந்தப் பிராமணனுக்கு ஆடையாபரணம், சத்திரசாமராதி பல வெகுமானங்கள் செய்து, உமக்கு இப்போதுதான்

வித்தியேசுவான் என்கிற நாமதேயம் சித்தித்தது என்று பேரை உறுதிப்படுத்தி அதற்கடையாளமாகப் பொற்சங்கிலியொன்று அவன் கையிற்போட்டு அவனை அனுப்பிவிட்டுத் தானும் தன் அரண்மனை போய்ச் சேர்ந்தான். இப்படி தெய்வ பலத்தாலும் மனுஷிய பலத்தாலும் காரியசித்தி யடைந்த அவ்விருவரும் பரமானந்த மடைந்தார்கள். ராஜவாஹனனும் தன்னில்லாளுக்கு நாடோறும் வியப்பும் களிப்புமுண்டாகும்படியான பல தேசத்துக் கதைகளைச் சொல்லிக்கொண்டு அவள் மனதிற்கு உற்சாக முண்டாக்கிக் கொண்டிருந்தான்.

இவ்வாறு கணவன் சொல்லிய விநோத விருத்தாந்தங்களைக் கேட்டு அவந்திசுந்தரியானவள் அதிசயப்பட்டு, "ஓ மகாராஜனே! உமது அனுக்கிரகத்தினல் இப்போதுதான் நான் காது படைத்தது சபலமாயிற்று. நீர் என் மனதில் அறிவு விளக்கேற்றி அஞ்ஞாநாந்தகாரத்தை யோட்டினீர்; அடியாள் உமக்குப் பணிவிடை செய்வதற்குப் பயனிதுதான்; யான் இப்பேருதவிக்குக் கைம்மாறு யாதொன்றுங் காண்கிலேன்; உமக்கு உரிமையில்லாத பொருள் ஒன்றும் அடியாளிடத்து இல்லையே; வேறென்ன நான் விண்ணப்பஞ்செய்யமாட்டுவேன்" என்று சொல்லக்கேட்டு, ராஜகுமாரன் அவள் குணத்துக்கும் நாகரிகத்துக்கும், சாதுரியத்துக்கும் வியப்படைந்தான். இப்படிப் பலவிதமாய்ப் பேசிக்கொண்டே இருவரும் மெய்ம்மறந்து உறக்கமுற்றனர். அவ்வாறு நித்திரையா யிருக்கையில் இருவருக்கும், தாமரை நூலினல் காலிரண்டுங் கட்டுண்ட ஒரு முனிவர் கனவிற்றோன்றினர். உடனே இருவரும் எழுந்திருக்கையில், செங்கமலத்தில் சந்திர

கிரணம் வீழ்ந்ததுபோல், அந்த ராஜகுமாரன் தாள்களில் வெள்ளி விலங்கு வந்து வீழ்ந்திருந்தது. அது கண்டு அருகேயிருந்த அவன் மனையாள் இதென்ன விபரீதம் என்று மனங்கலங்கி கோவென்று கதறத் தலைப்பட்டாள். அவ்வழுகைக் கூச்சலைக்கேட்டு அந்தப்புரத்திலுள்ளவர்கள் அனைவரும் இன்னதென்று தெரியாமல் திகில் அடைந்தவர்களாய்ப் புலம்பிக் கொண்டு, இது உள்ளே போகத்தக்க தருணமோ அல்லவோ வென்பதையும் விசாரியாமல் அங்கே சென்று நிறைந்துபோயினர். அது தெரிந்து காவலாளரெல்லாம் என்ன என்னவென்று ஓடிவந்து விலங்கும் காலுமாய் ராஜகுமாரன் படுத்திருப்பதுகண்டு, அவனுடைய தேஜஸினால் அவனை ஒன்றுஞ் செய்ய மாட்டாமல் இச்செய்தியை அப்போது அரசனாயிருந்த சண்டவர்மாவுக்கு அறிவித்தனர்.

அச்செய்தி காதில் வீழ்வதற்கு முன்னமே சண்டவர்மா கண்களில் நெருப்புப் பொறி பறக்க ஓடிவந்து அந்த ராஜகுமாரன் அவந்திசுந்தரியண்டை படுத்திருப்பதுகண்டு, ஓகோ! இவன், நம் சோதரனைக் கொல்வித்த பாவியான பாலசந்திரிகையின் மணமகனாகிய புஷ்போத்பவனுடைய மித்திரனன்றோ; தற்புகழ்ச்சியுள்ள அந்த வேஷக்காரன் என்னென்னவோ பற்பல தந்திரங்கள் செய்து நகரத்தாரனைவரையும் மோகிப்பித்துப் பெரிய மோசம் செய்துவிட்டான். அவை நிற்க, சிங்கம்போல நாமிருக்க, நம்மையெல்லாம் அவமதித்து இந்தச் சிறுக்கி எப்படி இவன்மேல் ஆசை கொண்டாள். குலத்திற்கு அவதூறு விளைக்கவந்த இந்தத் தான்தோன்றிப் பெண் இன்னும் ஒரு நிமிஷத்தில், தன் கணவன் உயிரிழந்திருக்கக் காணப்

போகிருள் என்று வெருட்டிக்கொண்டே எயிறு தின்று புருவ நெறிந்து ஓடிவந்து இருப்புத்தடி போன்ற தன்கையால் அந்த ராஜகுமாரனுடைய செந்தாமரைக் கைகளைப் பிடித்திழுத்தான். ஆயினும் அந்த ராஜகுமாரன், தைரியமும் பராக்கிரமமும் பொறுமையுமுடையவனாதலால், விதியை யார் வெல்லக்கூடுமென்று தன்னுள்ளத்தை உறுதிப்படுத்திக்கொண்டு உயிரிழக்கத்துணிந்த தன் தேவியையும், "என் கண்மணியே! நீ முன்னடந்த அன்னத்தின் கதையை நினைத்துக்கொண்டு இரண்டு மாதகாலம் பொறுத்திரு; வெயில் எறித்துக் காய்வதெல்லாம் பின்னிட்டு மழையுண்டாக்குவதுபோல இந்தச் சங்கடம் இனி நமக்கு விசேஷ சௌக்கியத்திற்குக் காரணமாகும்" என்று சமாதானப்படுத்திப் பகைவர் கையில் சிக்கிக்கொண்டு சிறைச்சாலை சேர்ந்தான்.

இச் செய்திகேட்டு அப்பெண்ணின் தாய்தந்தையர்கள், சண்டவர்மாவண்டை வந்து நீ எங்கள் மருமகனைக் கொல்வாயாகில், நாங்களும் அவனுடன் பிராணனை விட்டுவிடுவோம் என்று சொல்லி மருமகனைக் காப்பாற்றினர்கள். ஆனல் அவனைச் சிறைமீட்க அவர்களுக்கு வல்லமையில்லாமற் போயிற்று. ராஜகாரியம் பார்த்துவந்த சண்டவர்மாவும் இச்செய்திகளெல்லாம் கைலாச மலையில் தவஞ் செய்துகொண்டிருக்கும் தர்ப்பராஜனுக்குத் தெரிவித்து, ராஜவாஹனனைச் சிறையில் வைத்ததுமன்றி, அவன் தோழனை புஷ்போத்பவனையும் குடும்பத்தோடு காவற்படுத்தினன். சிங்கம் வலையில் அகப்பட்டதுபோற் பகைவர் கையில் அகப்பட்டுக்கொண்ட ராஜவாஹனனும், முன் தனக்கு அந்தணன் கொடுத்த மணியின்

மகிமையால், பசி தாகம் முதலிய துன்பங்களில்லாம லிருந்தான்.

இப்படியிருக்கையில் அந்தச் சண்டவர்மா, அங்க தேசத்தரசன் மகளாகிய அம்பாலிகை யென்பவளைத் தனக்குக் கலியாணஞ்செய்து கொடுக்கும்படி கேட்டதற்கு அவன் சம்மதிக்காமையால் அவன்மேற் படை யெடுத்துச் சம்பாநகரத்தை முற்றுகைபோட்டான். சிங்கவர்மாவென்கிற அத்தேசத்தரசன் தான் மிக்க பலிஷ்டனென்று தற்புகழ்ச்சிகொண்டு, தனக்குத் துணையாகும்படி தான் எழுதியனுப்பிய ராஜாக்களெல்லாம் விரைவில் வருவதாய் இருக்கவும் அவர்களை மதியாமல் பகைவனை எதிர்த்தனன். கடைசியில் சண்டவர்மா அவனைப் பிடித்துக்கொண்டு அவன் மகளிடத்துள்ள அன்பினால் அவனைக் கொலை செய்யாமல் அவன் தேகத்திலிருந்த காயங்களை ஆற்றிக் காவலில் வைத்து மறுநாளுதயத்திற் சிங்கவர்மாவின் மகளைத் தான் பாணிக்கிரகணம் செய்வதாய்ப் பிரசித்தப் படுத்தினான். உடனே தர்ப்பசாரனிடத்தினின்றும் தான் அனுப்பி யிருந்ததற்குப் பதிலும் வந்தது. அதை அவன் படித்துப்பார்க்க அதிலிருந்ததாவது: அடாமூடா! பெண்களை அநியாயமாய்த் திருடுகிற கொடியனிடத்திலும் கருணையா? கிழத்தனத்தால் மானவமானந் தெரியாமல் மகளைப் பெரிதாயெண்ணி அந்தக் கிழவன் ஏதாவது பிதற்றினால் அதை நீயேன் கேட்டாய்; அதிசீக்கிரத்தில் நீ அந்தத் துஷ்டனை சித்திரவதை செய்யவேண்டும்; அச்செய்தி கேட்டு என்செவி குளிரவேண்டும்; அந்தத் தீய செயல் செய்த சிறுக்கியையும் அவள் தம்பியையும் சிறை செய்ய வேண்டும் என்று எழுதியிருந்தது. அச்செய்தி பார்த்த

வுடனே சண்டவர்மா, சிறையிலிருக்கும் அந்தத் துஷ்டப்பயலை நாளைக் காலையில் கோட்டை வாயிலிற் கொண்டு நிறுத்தி, பட்டத்து யானையைச் சிங்காரித்து அவ்விடத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்றும், இந்த விவாஹம் முடிந்ததும் நானே நேராய் வந்து அவனை யானையின் காலுக்கு இலக்காக்கிவிட்டு அப்புறம் அதன்மேலேயே ஏறிவந்து, இங்கே நம்மெதிரிக்குத் துணை செய்யவந்திருக்கிற ராஜாக்களையும் சங்கரிக்கிறேன் என்றும், தன் கீழதிகாரிகளுக்குச் செய்தி சொல்லி அனுப்பினான். அவர்களும் அப்படியே செய்வித்தார்கள். அத்தருணம் அந்த ராஜகுமாரனுக்குச் சாபம் நீங்குகிற காலமாகையால் அவன் கால்களிலிருந்த வெள்ளிவிலங்கானது ஒரு தெய்வப் பெண்ணாகி, அவனை வலம்வந்து கும்பிட்டுக் கைகூப்பிக் கொண்டு எதிரே நின்று ஒரு வார்த்தை சொல்லிற்று: "ஓ ஸ்வாமி! அடியாளிடத்தில் தேவரீர் கிருபை செய்தருளவேண்டும்; நான் சுரதமஞ்சரி என்கிற ஒரு தெய்வப் பெண்; ஒருநாள் நான் ஆகாயத்தில் பறந்து வந்த களஹம்ஸத்தை மடக்கி விளையாடிக் கொண்டிருக்கையில் என் கழுத்திலிருந்த முத்துமாலை நழுவி இமயமலையில் ஒரு தடாகத்தில் ஸ்நானஞ்செய்து கொண்டிருந்த மார்க்கண்டேய முனிவர் தலையில் விழுந்தது; விழவே அவர், நீ அறிவிழந்து உலோஹமாய்ப் போகக்கடவை என்று என்னைச் சபித்தார்; அது தெரிந்து நான் அவர் பாதாரவிந்தத்தில் விழுந்து முறையிட்டுக்கொள்ளவே, அவர் என்னிடத்தில் இரக்கமுற்று, இரண்டுமாத காலம் உமது கால்களுக்கு விலங்கா யிருக்கும்படியாகவும், அக்காலத்திலும் அறிவு குறையாம லிருக்கும்படியாகவும் அனுக்கிரகித்தார்;

அப்படியே நானும் வெள்ளி விலங்காய் மாறிப்போயி னேன். ஒருகால் வீரசேகரனென்கிற ஒரு வித்தியா தரன், விலங்குவடிவான என்னை எடுத்துக்கொண்டு வருகையில் வழியில் தர்ப்பசாரன் தவஞ் செய்யக் கண்டு, நரவாஹனதத்த னென்கிற வித்தியாதரனிடத் தில் தான் ஏதோ ஒரு காரணத்தால் பகைகொண் டிருந்ததனால் அப்பகைவனைக் கொல்வதற்கு இவன் தான் தக்க துணையென்று அந்தத் தர்ப்பசாரனண்டை வந்துசேர, அவனும் வீரசேனனுக்குத் தன் உடன் பிறந்தாளை விவாகஞ் செய்துகொடுக்கும்படி சபதம் பண்ணிக்கொடுத்தான். அப்படியிருக்கையில் அந்த வீர சேனன் அந்தப் பெண்ணைப் பார்க்கவேண்டுமென்று ஒருநாள் இரவில் பகல்போல நிலவு காய்ந்துகொண் டிருக்கப் புறப்பட்டு இவ்வந்தப்புரம் வந்து பார்த் தான். நீங்களிருவரும் படுத்திருந்தீர்கள். அது கண்டு அவன் கோபமூண்டு உம்முடைய மகிமையால் உம் மைக் கொல்லத் திறமையற்று விலங்குவடிவாய் அவன் கையிலிருந்த என்னால் உமது கால்களைத் தளைத்துவிட் டுத் திரும்பிப் பாராமல் அப்புறம் போயினன். என் சாபம் இப்போது முடிவுபெற்றது. இனி அடியாள் செய்ய வேண்டுவது என்னவோ அருளிச்செய்ய வேண்டுமென்று அந்தச் சுரதமஞ்சரி சொல்ல அந்த ராஜன், இச் செய்தியைச் சொல்லிப் பாலசந்திரிகை யைத் தேற்றுவாய் என்று அனுப்பினன்.

இப்படியிருக்க, சண்டவர்மா சிங்கவர்மாவின் மகளை மணம்புரியப் போனவிடத்தில் யாரோ ஒருவன் மறைவாய் வந்து அவனைப் பிடித்திழுத்துக் கொன்று விட்டு மற்றுமங்கிருந்தவர்களையும் அடித்துப் பிணக் காடாக்கினன் என்று பெருங் கூச்சலொன் றுண்டா

யிற்று. அது காதிற்பட்ட மாத்திரத்தில் ராஜவாஹனன் தன்னைக் கொல்லவந்த யானைமேலேயே ஏறிக்கொண்டு அதி வேகமாய் அவ்விடம் போய்ச் சேர்ந்து ஒருவரையும் மதியாமல் உள்ளே நுழைந்து, லோகோபகாரமான இச்செயல் செய்த மகாபுருஷன் எவன்? அவன் அதிவேகமாய் வந்து என்னுடன் இந்த யானைமேலேறிக் கொள்ளலாம்; அவனுக்கு ஒருபோதும் ஓர் அபாயமும் இல்லை என்று கூவினான். அதைக் கேட்டு அந்தப் புருஷன் சந்தோஷமடைந்து ராஜகுமாரனெதிரே வந்து அவனைக் கும்பிட்டு அந்த யானைமேலேறிக் கொண்டான். அவனைக் கண்டு ராஜவாஹனன், ஓ! ஓ! இவன் நம் தோழனாகிய அபஹாரவர்மா என்று தெரிந்துகொண்டு அகங்களித்து அவனைக் கெட்டியாய்க் கட்டிக்கொண்டான். அபஹாரவர்மாவும் யானைமேலேறினவுடனே தன்னை எதிர்த்துவந்தவர்களைப் பல அம்புகள் பொழிந்து துரத்திவிட்டான்.

இத்தருணத்தில் இவர்களுக்கு எதிரே மற்றொருவன், தப்பியோடினவர்களைப் புடைத்துக் கொண்டே வந்து, யானைமேலிருந்த இருவரையுங் கண்டு, முன் அபஹாரவர்மா சொல்லக் கேள்விப்பட்ட லக்ஷணங்களோடு கூடியிருப்பதனால் இவன்தான் ராஜவாஹனனென்று தெரிந்துகொண்டு மிக்க களிப்புடனே குதூகலங்கொண்டு அவனுக்குத் தண்டன் சமர்ப்பித்து அபஹாரவர்மாவைப் பார்த்து, "ஸ்வாமி! தங்கள் கட்டளைப்படி அங்கதேசத் தரசனுக்குத் துணைசெய்ய அரசர்களைக் கொண்டு சேர்த்தேன். இனிச் செய்ய வேண்டுவதை நியமிக்கக் கடவீர்" என்றான். அபஹாரவர்மாவும் அவனுடைய பராக்கிரமத்துக்குச் சந்தோஷித்து ராஜகுமாரனைப் பார்த்து, "மகாராஜாவே! இவ

னைக் கடாக்ஷிக்கவேண்டும். நம் உயிரைவிட இவனை நமக்கு மேலான ஆப்தனென்று சொல்லலாம்; எங்கே யாவது ஏகாந்தமாய்ப் போய் உட்கார்ந்து அங்கே ராஜன முதலிய நந்தோழர்கள் யாவரையும் அழைத்து வரச் சொல்லுவோம்" என்று கூற, ராஜவாஹனன் உன்னிஷ்டப்படி நடக்கலாம் என்றான். அப்படியே அபஹாரவர்மா அவர்களை யெல்லாம் இட்டுக்கொண்டு வரும்படி தன் சேவகனுக்குக் கட்டளையிட்டுத் தான் ராஜகுமாரனுடன் பட்டணத்துக்கு வெளியில் இந்திரனுடைய நந்தவனம் போலவும் குபேரனுடைய சைத்திரத வனம் போலவும் பொலிவுற்றுக் கண்ணையும் கருத்தையும் கவராநின்ற ஒரு உத்தியானவனத்திற்குப் போய்ச்சேர்ந்தான். உடனே கொடிப் பொழுதில் தன் மித்திரன் என்கிற சேவகன் அங்கங்கே போய், உபஹாரவர்மா, அர்த்தபாலன், பிரமதி, மித்திரகுப்தன், மந்திரகுப்தன், விச்ருதன், மிதிலா நகரத்தரசனை பிரஹாரவர்மா, காசிதேசத்தரசனை காமபாலன், சம்பாநகரத்தரசனை சிங்கவர்மா இவர்களை இட்டுக்கொண்டு வந்துசேர்ந்தான். ராஜவாஹனனும் தன் தோழர்களெல்லாம் ஒருங்கேவந்து சேர்ந்தது கண்டு, கண்கெட்டுத் தவித்தவன் திடீரென்று கண் பெற்றாற் போலவும், மகா தரித்திரன் நினையாமலே ஒரு பெரு நிதியைப் பெற்றாற் போலவும், ஒருவன் இவ்வுடலோடேயே சொர்க்கலோக மடைந்தாற் போலவும் களிப்பினால் சிறிதுநேரம் உடம்பு மறந்து ஒன்றும் தோன்றாமல் பிரமித்துநின்று பின்பு அவர்களுக்குத் தக்கபடி மரியாதை செய்து புதிதாய் வந்திருக்கிற மிதிலையரசன் முதலிய மூவருடைய வரலாற்றையும் அபஹாரவர்மா சொல்லத் தெரிந்து

கொண்டு தங்கள் மூவருடைய கதைகளையும் அவர்களுக்குச் சொல்லிப் பிறகு அவர்களுடைய கதைகளைக் கேட்கலுற்றான். முதலில் அபஹாரவர்மா சொல்லத் தொடங்கினான்.

மேலே சொல்லிய அபஹாரவர்மா முதலிய பதின்மரே தசகுமாரர்கள்.

முற்றிற்று.